விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 01 செவ்வாய்க்கிழமை (17.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

## அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்

வெளிவிவகார அமைச்சராக பீரிஸ்
சுகாதார அமைச்சராக கெஹலிய

3 ஆம் பக்கம் பார்க்க

## இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் பதிவுத் திருமணங்கள் நடத்த அனுமதி

3 ஆம் பக்கம் பார்க்க

## கொரோனா தொற்றாளர்களை வீட்டிலேயே பராமரிக்கும் திட்டம் வடக்கில் ஆரம்பம்

3 ஆம் பக்கம் பார்க்க

### கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனா

# வார இறுதி நாட்களில் முழுநேர ஊரடங்கு?




## அரசாங்கம் தீவிரமாக ஆராய்கிறது

(கொழும்பு) நாடு முழுவதும் தினமும் இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வார இறுதி நாட்களில் முழுநேர ஊரடங்கு உத்தரவை அமுல் படுத்துவதற்கு அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறிய முடிகின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

### அதிகரித்த தொற்றாளர்கள்

## கொடிகாமம் சந்தை மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தையில் அதிகளவான தொற்றாளர்கள் இனங் காணப்பட்டதையடுத்து இன்று செவ்வாய்க்கிழமையில் இருந்து கொடி

19

### விபரீத முடிவெடுத்த

## 19 வயது யுவதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்த இளம் யுவதி ஒருவர் நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

இதில் மானிப்பாயைச் சேர்ந்த சுரேஸ்குமார்சுலக்சனா என்ற 19 வயதுடைய

19

## உயிரிழப்பு 167

### +3,466 தொற்றாளர்கள் நேற்றும் அடையாளம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 167 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரி

19

### கடந்த வாரம் 24 ஆயிரம் பேருக்கு கொரோனா

## உண்மையான தொற்று இதைவிட 3 மடங்கு அதிகமாக இருக்கும்

### இலங்கை மருத்துவ சங்கம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் தரவுகளின் பிரகாரம் கடந்த ஒரு வாரத்தில் இலங்கையில் 24,000 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்

19

## இஸ்லாமிய இராச்சியமாகும் ஆப்கான்

- ஆயிரக்கணக்கான மக்கள் விமான நிலையத்தில் குவிவு
- பறக்கும் விமானத்தில் தொங்கி கீழே விழுந்த மூவர் உயிரிழப்பு
- கூட்ட நெரிசல், துப்பாக்கிச் சூட்டில் ஐவர் உயிரிழப்பு



19

### இரவு நேர ஊரடங்கு

## மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும்

(கொழும்பு)

ஒவ்வொரு நாளும் இரவு 10 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 4 மணி வரை தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு விதிக்கப்படும்.

19

## வவுனியாவில் 59 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 59 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ள

19

### யாழில் நால்வர் உட்பட

## வடக்கில் ஆறு பேர் கோவிட்டால் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் நால்வர் உட்பட வடக்கில் ஆறு பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அச்சு

19

## யாழிலிருந்து முல்லைத்தீவில் உள்ள ஆலயத்துக்கு சென்றவர்

### வீதி விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவிலுள்ள ஆலயம் ஒன்றுக்கு நாதஸ்வரம் வாசிக்கச் சென்றவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இதில் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 19 |
| 11 | 07 |
| 1959 | 2021 |

## அமரர் பழனிவேல் ஜெயந்தி (பேபி)

(கதிரிப்பாய், அச்சுவேலி)

(C-2538)

வீணை மீட்டும் விரல்களைப் போல
நெஞ்சை மீட்டிப் போகின்றன உங்கள் நினைவுகள்
அன்பாக பேசிப் பழகிய நினைவுகள் என்றும்
நீங்கா அலைகளாக எமது நெஞ்சில்

எம்மைப் பார்த்தும் குழந்தையாக மாறும் மனம் உங்களது
அதையே பெரிதும் விரும்பும் குணம் எமது
எங்கு சென்றாலும் கவனம், பார்த்துப் போங்கள் என்று
சொல்லும் தாய் மனது

எப்போதும் இதழின் ஓரம் பூக்கும் புன்னகை
அப்புன்னகை மாறா பேச்சு எம் கண்முன் நிழலாடும்
உருவானது முதல் எங்கெங்கோ அலைந்து திரியும் நதி
கடலை அடைந்ததும் ஓய்வு பெறுவது போல
இறைவனடி சேர்ந்த உங்களது ஆத்மா
சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்புப் பெறாமக்கள்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சக ஆசிரியை
திருமதி **பிரவீனா ஜெயகாந்தன்**
அவர்களின் அன்பு மாமனார்
அமரர்
## கந்தையா மகேந்திரன்
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு அன்னாரின்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம். (C-2549)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா / உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

# நடேஸ்வர அன்னையின் கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **சிவதர்சினி கோகுலன்** அவர்களின்
அன்புத் தந்தை
## அமரர் கந்தசாமி சிவாநந்தம்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7671)

பாடசாலைச் சமூகம்
யா/நடேஸ்வரக் கல்லூரி - காங்கேசன்துறை

# மணிவிழா வாழ்த்து

17.08.2021



உயர்திரு.
## செல்லையா இரவீந்திரராசா
(B.A, Dip. in. Ed., SLPS - I)
(அதிபர் - மு / கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம்)

Best Wishes

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | மு / அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம் | 1985.12.26 - 1987.12.31 |
| ஆசிரியர் | மு / செம்மலை மகா வித்தியாலயம் | 1988.01.01 - 1993.01.31 |
| பிரதி அதிபர் | மு / உடையார்கட்டு மகா வித்தியாலயம் | 1993.02.01 - 1997.01.14 |
| பிரதி அதிபர் | மு / இரணைப்பாலை மகா வித்தியாலயம் | 1997.01.15 - 1998.11.30 |
| அதிபர் | மு / ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை | 1998.12.01. - 2006.01.15 |
| அதிபர் | மு / வள்ளிபுனம் மகா வித்தியாலயம் | 2006.01.16 - 2007.01.03 |
| அதிபர் | மு / உடையார்கட்டு மகா வித்தியாலயம் | 2007.01.04 - 2008.01.03 |
| அதிபர் | மு / புதுக்குடியிருப்பு கோட்டம் | 2008.01.04 - 2009.01.13 |
| அதிபர் | வ / மெனிக்பாம் நலன்புரி நிலையம் | 2009.01.14 - 2011.01.03 |
| அதிபர் | மு / கள்ளப்பாடு அரச தமிழ்க் கலவன் பாடசாலை | 2011.01.04 - 2016.01.03 |
| அதிபர் | மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 2016.01.04 - 2018.09.15 |
| அதிபர் | மு / புதுக்குடியிருப்பு கோட்டம் | 2018.09.16 - 2019.09.01 |
| அதிபர் | மு / கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம் | 2019.09.02 - 2021.08.17 |

ஆசிரிய, அதிபர் பணியில் 36 வருடங்கள் அரும்பணியாற்றி இன்று அறுபதாவது அகவையை நிறைவுசெய்து ஓய்வுபெறுகின்ற தங்கள் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இந்த மணிவிழா நாளில் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்பாக வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

(C-2547)

வாழ்த்துவோர் :
அகிலன் குடும்பம் - ஜெயா புத்தகசாலை, புதுக்குடியிருப்பு.

# மணிவிழா வாழ்த்து

17.08.2021



உயர்திரு.
## செல்லையா இரவீந்திரராசா
(B.A, Dip. in. Ed., SLPS - I)
(அதிபர் - மு / கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம்)

Best Wishes

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | மு / அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம் | 1985.12.26 - 1987.12.31 |
| ஆசிரியர் | மு / செம்மலை மகா வித்தியாலயம் | 1988.01.01 - 1993.01.31 |
| பிரதி அதிபர் | மு / உடையார்கட்டு மகா வித்தியாலயம் | 1993.02.01 - 1997.01.14 |
| பிரதி அதிபர் | மு / இரணைப்பாலை மகா வித்தியாலயம் | 1997.01.15 - 1998.11.30 |
| அதிபர் | மு / ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை | 1998.12.01. - 2006.01.15 |
| அதிபர் | மு / வள்ளிபுனம் மகா வித்தியாலயம் | 2006.01.16 - 2007.01.03 |
| அதிபர் | மு / உடையார்கட்டு மகா வித்தியாலயம் | 2007.01.04 - 2008.01.03 |
| அதிபர் | மு / புதுக்குடியிருப்பு கோட்டம் | 2008.01.04 - 2009.01.13 |
| அதிபர் | வ / மெனிக்பாம் நலன்புரி நிலையம் | 2009.01.14 - 2011.01.03 |
| அதிபர் | மு / கள்ளப்பாடு அரச தமிழ்க் கலவன் பாடசாலை | 2011.01.04 - 2016.01.03 |
| அதிபர் | மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 2016.01.04 - 2018.09.15 |
| அதிபர் | மு / புதுக்குடியிருப்பு கோட்டம் | 2018.09.16 - 2019.09.01 |
| அதிபர் | மு / கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம் | 2019.09.02 - 2021.08.17 |

ஆசிரிய, அதிபர் பணியில் 36 வருடங்கள் அரும்பணியாற்றி இன்று அறுபதாவது அகவையை நிறைவு செய்து ஓய்வுபெறுகின்ற தங்கள் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இந்த மணிவிழா நாளில் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்பாக வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்
மு / கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம்

(C-2546)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டம் வடக்கு மாகாணத்திலும் ஆரம்பம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன்

(கொழும்பு)

**கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டமானது வடக்கு மாகாணத்தில் நேற்று திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளியை அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தொடர்பு கொண்டு அவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவதற்கு தகுதியானவரா? என்பதனை முதலில் பரிசோதிப்பார்.

அப்போது கீழ்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

- நோயாளி இரண்டு தொடக்கம் 65 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- தொற்று உறுதி செய்யப்பட்டவர் கொவிட் அறிகுறி எதுவும் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.
- கர்ப்பிணித் தாய்மார்களாயின் அவர்கள் 24 வாரங்களிற்குட்பட்ட கர்ப்பவதிகளாக இருத்தல் வேண்டும்.
- வேறு நோய் நிலைமை உள்ளவர்களிற்கு அந்த நோய் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
- நோயாளியின் வீடானது அவரினை ஏனையவர்களிடமிருந்து நோய் பரவாது தனிமைப்படுத்தி வைத்திருக்கக் கூடிய வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
- நாளாந்தம் தொலைபேசி மூலம் அவரது நோய் நிலைமையினை கண்காணிப்பதற்குரிய தொலைபேசி வசதிகள் நோயாளியின் வீட்டில் இருத்தல் வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரியினால் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டால், அவரது விபரங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் இதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கணனி மென்பொருளில் தரவேற்றம் செய்யப்படும்.

அதன் பின்னர் மத்திய சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட அழைப்பு நிலையத்தில் இருந்து மருத்துவர்கள் தினமும் நோயாளியினை தொடர்பு கொண்டு நோயாளியின் உடல் நிலைமையினை கண்காணிப்பர்.

தேவை ஏற்படின் நோயாளியும் அம்மருத்துவரினை தொடர்பு கொள்ளமுடியும்.

நோ்யாளியின் உடல் நிலைமை மோசமடையும் சந்தர்ப்பத்தில் நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியிருப்பின் அத்தகவல் உடனடியாக பிராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரிக்கு வழங்கப்படுவதைத் தொடர்ந்து அவர் அந்நோயாளியினை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளினை செய்வார்.

பி.சி.ஆர். செய்யப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு நோயாளியும் இவ்வாறு 10 நாட்கள் வீட்டுப்பராமரிப்பில் வைத்திருக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவர் என அவர் தெரிவித்தார். (நி-5-33)

## இலங்கை பொலிஸாருக்கான பயிற்சியை நிறுத்தியது பிரித்தானியா

(கொழும்பு)

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தீவிரமடைந்துள்ளதால், இலங்கை பொலிஸாருக்கு பிரித்தானிய பொலிஸாரால் வழங்கப்படவிருந்த பயிற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அண்மைய காலங்களில் அதிகரித்துள்ள கைதுகளின் பின்னரான மரணங்கள், சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக வெளியான அறிக்கைகள் காரணமாக, மே மாதம் இலங்கைப் பொலிஸாருக்கான பயிற்சியை நிறுத்த ஸ்கொட்லாந்து பொலிஸ் தீர்மானித்தது. (நி-5)

## இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் பதிவுத் திருமணங்களை நடத்துவதற்கு அனுமதி

(கொழும்பு)

நாட்டில் பதிவுத் திருமணங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருமணங்களை வீட்டிலோ அல்லது திருமண மண்டபத்திலோ நடத்துவதற்கு மறு அறிவித்தல் வரையில் தடை விதித்து நேற்று முன்தினம் அறிவிப்பு வெளியாகியிருந்தது.

இந்த நிலையிலேயே தனிமைப்படுத்தல் உத்தரவுகள் குறித்து விளக்கமளித்த பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இவ்வாறு தெரிவித்தார். இதற்கமைய, பதிவுத் திரு மணத்தை நடத்துவதாயின், சம்பந்தப்பட்டவர்களின் வீட்டில் அதனை நடத்த அனும்தி வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இதன்போது, மணமகன் மற்றும் மணமகள் ஆகியோருடன், அவர்களின் பெற்றோர்களும், பதிவாளரும், சாட்சியாளர்கள் இருவரும் பங்கேற்க முடியும் என அவர் குறிப்பிட்டார். இதனைத் தவிர்த்து வேறு எவருக்கும் இதன்போது பங்கேற்க அனுமதி வழங்கப்படமாட்டாதென்றும் அவர் தெரிவித்தார் . (நி-5)

## அமைச்சரவையில் மாற்றம்; இடம் மாறிய கல்வி, வெளிவிவகார அமைச்சுக்கள்





(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் நேற்று சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவை அமைச்சர்களாக 7 பேர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

புதிய அமைச்சர்களின் விபரங்கள்

கெஹலிய ரம்புக்வெல- சுகாதார அமைச்சர்

டலஸ் அழகப்பெரும- ஊடகத்துறை அமைச்சர்

ஜீ.எல்.பீரிஸ்- வெளிவிவகார அமைச்சர்

தினேஸ் குணவர்த்தன- கல்வி அமைச்சர்

பவித்ரா வன்னியாராச்சி- போக்குவரத்து அமைச்சர்

காமினி லொக்குகே- மின்சக்தி அமைச்சர்

நாமல் ராஜபக்ஷ- இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு மேலதிகமாக அபிவிருத்தி கண்காணிப்பு என்ற விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


## பதவி வெற்றிடம்

**இலங்கையின் பிரபல நிதி நிறுவனம் ஒன்றின் துணை நிறுவனமான காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு யாழ். மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளைகளுக்கான பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.**

**● நிதி திட்டமிடலாளர்**

- வயதெல்லை: 18 இலிருந்து 45 வரை
- க.பொ.த. சாதாரணதர (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்
- வாடிக்கையாளர்களுடன் சிறந்த தொடர்பாடல் திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை

**● அணித்தலைவர்**

- வயதெல்லை: 20 இலிருந்து 45
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- காப்புறுதி/ சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
- ஒரு அணியை கொண்டு நடத்தும் திறன்

மேற்குறித்த பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையினை (CV) கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Whats App -077 662 2140
Viber -077 662 2402
Gmail-sureshrajah51@gmail.com (7663)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட்; மே.தீவுகள் 1 விக்கெட்டினால் வெற்றி

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 1 விக்கெட்டினால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

ஜமைக்காவில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 217 ஓட்டங்களுக்கு சுருண்டது.



இதன்போது பாகிஸ்தான் அணி சார்பில் அதிகப்பட்ச ஓட்டங்களாக, அலாம் 56 ஓட்டங்களையும் ப்ஷீம் அஷ்ரப் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 253 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கார்லோஸ் பிரத்வெயிட் 97 ஓட்டங்களையும் ஜேஸன் ஹோல்டர் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து 36 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி, 203 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 168 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பாபர் அசாம் 55 ஓட்டங்களையும் அபிட் அலி 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து 168 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் அந்த அணி 1 விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, ஜெரமைன் பிளக்வுட் 55 ஓட்டங்களையும் கெமார் ரோச் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக எட்டு விக்கெட்டுகளையும் வீழ்த்திய மேற்கிந்திய தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. (4-6)

# கோலியை சீண்டிய அன்டர்சன் மைதானத்தில் முறுகல்



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வரும் நிலையில் இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி, அன்டர்சனை கடுமையான வார்த்தைகளில் திட்டிய ஒரு வீடியோ வைரலாகி வருகிறது.

ஏற்கனவே முதலாவது டெஸ்ட் போட்டியின் போது இந்திய அணியின் இளம் வீரரான சிராஜை வேண்டுமென்றே அன்டர்சன் சீண்டியிருந்தார். அதனை தொடர்ந்து இரண்டாவது போட்டியிலும் கோலியை அதே போன்று சீண்டிப் பார்த்தார்.

ஆனால் விராட் கோலியோ தனக்கே உரித்தான பாணியில் அவருக்கு ஆக்ரோஷமான பதிலடி கொடுத்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின் இரண்டாவது இன்னிங்சின் போது ஆரம்பத்திலேயே 2 விக்கெட்டை இழந்த நிலையில் விளையாட வந்த கோலி 17-வது ஓவரின் போது புஜாரா அடித்த பந்தில் ஒரு ரன் ஓடலாம் என்று நினைத்தார்.

ஆனால் பிட்சின் குறுக்கே ஆண்டர்சன் நடந்து சென்றதால் கடுமையான கோபம் அடைந்த கோலி இது போட்டியின் பிட்ச் அன்டர்சன், "உங்கள் வீட்டு தோட்டம் கிடையாது என அவரை திட்டினார். கோலி இவ்வாறு பேசியது ஸ்டம்ப் மைக்கில் பதிவாகியது. (4-6)

# டென்னிஸ்; மெட்வேடவ் சம்பியன்

தேசிய வங்கி பகிரங்க டென்னிஸ் தொடரில், ரஷ்யாவின் முன்னணி வீரரான டேனில் மெட்வேடவ் மற்றும் இத்தாலியின் கமிலா ஜியோர்கி ஆகியோர் சம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்ற, தேசிய வங்கி பகிரங்க டென்னிஸ் தொடரில் நான்கு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

கடினத் தரையில் நடைபெற்ற இத்தொடர், கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று முன்தினம் வரை நடைபெற்றது.



இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் முன்னணி வீரரான டேனில் மெட்வேடவ், அமெரிக்காவின் ரெய்லி ஒபெல்காவுடன் மோதினார். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், டேனில் மெட்வேடவ், 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேசிய கபடி அணியின் முதற்கட்ட தெரிவில் கிளிநொச்சி யுவதிகள் மூவர் தெரிவு







இலங்கையின் தேசிய கபடி அணியில் முதற்கட்ட தெரிவில் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் மூன்று யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற தேசிய கபடி அணிக்கான முதற்கட்ட தெரிவில் நாடளாவிய ரீதியில் 25 பேர் கலந்து கொண்டனர். இதில் 18பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 18 பேரில் கிளிநொச்சி யுவதிகள் மூவரும் அடங்கு கின்றனர். ஆரம்ப கட்டபயிற்சியை ஆசிரியர் இராமநாதன் பரஞ்சோதியிடம் பெற்ற இவர்கள் கடந்த காலங்களில் தேசிய மட்ட போட்டிகளிலும் பங்குப்பற்றியிருந்தனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள ஆசிய மட்ட கபடி போட்டிக்கான இலங்கை அணியின் முதற் கட்டத்தில் தெரிவில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டுள்ள 18 பேரிலிருந்து இறுதியாக12 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த தெரிவிலும் இவர்கள் தேசிய அணிக்குள் உள்வாங்கப்படுவதற்கான அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக கூறப்படுகிறது. (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் உயிரிழப்புகள் இந்தியாவைவிட இலங்கையில் 15 மடங்கு அதிகம்



(கொழும்பு)

**இந்தியாவை விட இலங்கையில் கொவிட் மரணங்கள் பதிவாகும் வீதம் 15 மடங்கு அதிகமாகும் என்று ஜோன் ஹெப்கின் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இவ்வாறான அபாயமான நிலையில் இரவில் மாத்திரம் ஊரடங்கினை நடைமுறைப்படுத்தியிருப்பது பிரயோசனமற்ற தீர்மானமாகும்.**

மருத்துத்துறையினரின் ஆலோசனைக்கு ஏற்ப தீர்மானங்களை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஒரு மில்லியன் சனத்தொகையில் ஒரு வாரத்திற்கு அதிகளவானோர் கொவிட் தொற்றால் உயிரிழக்கும் பட்டியலில் உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னோக்கிச் செல்கிறது. தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் வேகம் அதிகரிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்திலுள்ளது.

இலங்கையில் நாளாந்தம் ஒரு மில்லியன் பேரில் 5.72 சதவீதமானோர் கொவிட் தொற்றால் உயிரிழப்பதாக ஜோன் ஹெப்கின் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை அமெரிக்காவில் 1.95 வீதமாகவும், இங்கிலாந்தில் 1.33 வீதமாகவும் , பிரான்ஸில் 0.76 வீதமாகவும், இந்தியாவில் 0.3 வீதமாகவும் காணப்படுகிறது. அதற்கமைய இந்தியாவை விட இலங்கையின் மரண வீதம் 15 மடங்கு அதிகமாகும்.

இவ்வாறான நிலையில் உடனடியாக ஊரடங்கினை நடைமுறைப்படுத்தினால் எதிர்வரும் 20 நாட்களில் பதிவாகக் கூடிய ஆயிரத்து 200 மரணங்களை தவிர்க்க முடியும் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்பது உலக நாடுகளில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)


## கடை வாடகைக்குண்டு

காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் சொந்தமான மாடிக் கட்டடத்தின் கீழ் அமைந்துள்ள கடையொன்றும் மேல் மாடியில் அமைந்துள்ள மூன்று கடைகளும் வாடகைக்குண்டு.

## உதவி ஐயர் தேவை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நித்திய பூசையில் ஈடுபடுவதற்கு உதவி ஐயர் தேவை. மாதக் கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

## கூறுவிலை கோரல்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வெளிப்பகுதியில் உள்ள கீழ்வரும் வேலைகளுக்கு கூறுவிலை கோரல்

- **கடை றோலர் கதவு**
- **மலசலகூடம் மீளப்புதுப்பித்தல்**
- **கடை நில வேலை செய்தல்**
- **தேர் தரிப்பிட கதவு அமைத்தல்**

மேற்குறிப்பிட்ட கடை வாடகை மற்றும் ஏனைய சேவைகளை செய்ய விரும்புவர்கள் 21.08.2021 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலய மண்டபத்திற்கு விண்ணப்பப்படிவத்துடன் நேரில் வருகை தரவும்.

**மேலதிக விபரத்திற்கு: 075 761 0010**

நிர்வாக சபை,
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
கொக்குவில். (7666)



# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்" (யோ. 10:25)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத் தலைவியே!
ஆண்டுகள் பதின்மூன்று ஆகிவிட்டாலும்
என்றும் உங்கள் நினைவு
எம்மை விட்டு விலகவில்லை அம்மா

அன்பின் திருவுருவே அழகிய ஒளிவிளக்கே
பண்பின் புகலிடமே பாசத்தின் பிறப்பிடமே- நீர்

அரவணைக்கும் அன்னையாய் அன்பான மாமியாய்
பாசமான பாட்டியாய் எம் வாழ்வு மலர்வதற்கு
ஏற்றம் இறைத்தவர் நீர்

ஆலமரம் சாய்ந்தது போல் ஆனதம்மா உம்பிரிவு
ஆண்டு பல ஆனாலும் ஆறாது எம் மனது

கலங்கும் விழிகளுடன் கைகூப்பி வணங்குகின்றோம்
இனிமையான உமது ஆத்மா இறைவனடி இளைப்பாற...!



அமரர். திருமதி
## பிலோமினா வின்சன் டீபோல்

மண்ணில்: 21.08.1942
விண்ணில்: 17.08.2008

றோஸ்கொட்
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

பிரிவுத்துயரில்
குடும்பத்தினர்

(7665)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்

# காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சியில் கற்கோவளம் இராணுவ முகாமிற்கென நான்கு ஏக்கர் தனியார் காணியினை சுவீகரிப்பதற்க்கான நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை காலை இடம் பெறவிருந்த வேளை அங்கு சென்ற அரசியல் பிரமுகர்களால் அந் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.**

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், உட்பட்ட சிலர் நில அளவை மேற்கொள்ள வந்த நில அளவையாளர்கள் மற்றும் அதிகாரிகளை நில அளவை மேற்கொள்ள செல்லவிடாது வீதிக்கு குறுக்கே இருந்து தடுத்து நிறுத்தினர்.

இப் போராட்டம் சுமார் ஒருமணி நேரம் நீடித்த நிலையில் குறித்த காணியை இராணுவத்திற்கு வழங்க மாட்டோம் என பொது மக்கள் சார்பில் யாராவது தெரிவித்தால் தாம் திரும்பி செல்வதாக நில அளவை திணைக்கள அதிகாரி தெரிவித்ததற்கு அமைவாக எம். கே. சிவாஜிலிங்கம் கடிதம் எழுதி நில அளவை மேற்கொள்ள வந்த அதிகாரிகளிடம் கொடுத்தார்.

இதனை தொடர்ந்து நில அளவை திணைக்கள அதிகாரிகள் திரும்பி சென்ற நிலையில் குறித்த போராட்டம் முடிவுற்றது.இதன் போது பொலிஸார் ஆயுதங்களுடனும் சிவில் உடையிலும் குவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்த க்கது. (4-7-18-60-33)







யாழ்.மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், விதையனைத்தும் விருட்சமே குழுமம் என்பன இணைந்து நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள புதுக்கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)



கனடாவைச் சேர்ந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் மானிப்பாய், சுதுமலை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 239 குடும்பங்களுக்கு 2700 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் நேற்று வழங்கி வைக் கப் பட்டன.(படம்-கஜிநதன்.சிவசாந்தன்)




## தடையுடை கந்தா!

தங்க ரதம் ஏறி வீதிவலம் வந்து
எங்கள் குறை தீர்த்து வைக்கும் கந்தனே!
உந்தன் அடி நாடி வர
எந்தனுக்கு ஏதடா தடை

தந்தை மடி அமர்ந்திருந்து ஐயனுக்கே
உபதேசம் செய்த அறிவோனே!
உந்தன் திருப் பாதம் தொழ
எந்தனுக்கு ஏதடா தடை

வள்ளி-தெய்வயானையுடன்
வெள்ளி மயில் ஏறிவரும் குமரனே!
உந்தன் திருவிளையாடல் தனை பார்த்திட
எந்தனுக்கு ஏதடா தடை

மாவை நா.கஜேந்திரன்

## கொரோனாவை ஒழிப்பாய் நீ..!

நீலமயில் மீதமர்ந்து நித்தமடி தொழுமடியார்
வேண்டும்வரம் அத்தனையும்- தருவோனே
வேலுருவில் யாழகத்து நல்லையிலே வீற்றிருந்து
வினைதுயரின் வேரறுக்கும்- பெருமானே
ஞாலமெலாம் பரவிநின்று மானிடரின் உயிர் குடிக்கும்
"கொரோனாவை" நீயொழித்து-அருள்வாயே
காலமெலாம் உனைநினைத்து கவிதைச்சரம் சூட்டுமெனைக்
காத்து நிற்கும் கடவுளான- முருகோனே!

சின்னையா சிவபாலன்,
கோண்டாவில்

## நல்லையில் காட்சி தா முருகா

வண்ணமயில் வாகனா வள்ளி மணவாளா
வலிமை பொருந்திய கதிர் வேலவா
வரும் பகையாவும் தீர்க்கும் குமாரா
வரம் வேண்டுவோருக்கு அருள்பவா

நல்லையில் கோவில் கொண்ட கந்தா
நாடிவருவோருக்கு நல்லருள் புரிபவா
மந்திரங்கள் ஒலிக்க மனநிறைவு கிடைக்க
மயில்வாகனனே நல்லையில் காட்சி தா...

கண்ணன்
அரியாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வயதிற்கு மேற்பட்ட 3 இலட்சம் பேர்

# இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளவில்லை

## சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நாட்டிலுள்ள 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் 3 இலட்சத்திற்கும் அதிகமானோர் இதுவரை எவ்வித தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்களே அதிகளவில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நாளாந்தம் கொரோனாவால் மரணிப்போரில் அதிகளவானோர் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களாவர். இதனால் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார், கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட தரப்பினரின் ஒத்துழைப்புடன் இந்த செயற்றிட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அதற்கமைய, வீடுகளுக்கு சென்று தடுப்பூசிகளை ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை இராணுவத்தினரால் கொழும்பு நகரில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் விரைவில் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டினார். (நி-5)

## தீவிர சிகிச்சைப்பிரிவுக்கு மாற்றப்பட்டார் மங்கள

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மங்கள சமரவீர நிமோனியாவால் பாதிக்கப்பட்டுள்ளார். அத்துடன், வேறு சில தொடர்புடைய சிக்கல்களாலும் பாதிக்கப்பட்டதையடுத்தே அவர் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டதாக அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். இரண்டு தடுப்பூசிகளைப் போட்டுக் கொண்ட போதும் மங்கள சமரவீர கொரோனா தொற்றுக் குள்ளாகிப் பாதிக்கப்பட்டமை கடந்த வாரம் உறுதி செய்யப்பட்டது. (நி-5)

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியிலும் மாற்றம்



(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதற்கு முன்னர் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:62செவ் 10 சூரி11 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: கமம்
எதிர்பார்ப்பு:சாததரணபெண். வடமராட்சி, தீவகம் வேண்டாம்.
தொ.இ: B/3296

பிறப்பு:1979 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 55 செவ்.சூரி6 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:பட்டதாரி, Work- DS Office
எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகம் பார்ப்பவர்.
தொ.இ: B/3309

பிறப்பு:1983இந்து நட்சத்திரம்:பரணி
கி.பா:14 செவ்.சூரி9 இல்
உயரம்:6
தகைமை/தொழில்: A/L போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர்
எதிர்பார்ப்பு:அரசவேலைபார்க்கும்பெண்
தொ.இ: B/3311

பிறப்பு:1975 கிறிஸ்தவம்
கி.பா: -செவ் 12 சூரி4இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:கட்டார் கணக்காளர்
எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுள்ள பிள்ளை. மெதடிஸ். இந்துசமயத்தினரும் ஏற்கப்படும்
தொ.இ: B/3375

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: **13 ½**செவ் 12சூரி9 இல்
உயரம்:5'1"
தகைமை/தொழில்:. A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ:G/6995

பிறப்பு:1992 இந்து நட்சத்திரம்:சதயம்
கி.பா:-செவ் 1 சூரி3 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:A/L.அழுகுக்கலை
எதிர்பார்ப்பு:வெளிநாடு,லண்டன்,கனடா, சுவிஸ்,ஜேர்மன்
தொ.இ:G/6998

பிறப்பு:1982இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா:**26 ½**செவ்12 சூரி10 இல்
தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ:G/7001

பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்:அனுசம்
கி.பா:- செவ் 7 சூரி12 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: M.Sc, ஆசிரியை லண்டன்
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்.பிள்ளைகள் இல்லை. லண்டனில்வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொ.இ:G/7002

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# விடுதலைப் புலிகளுடன் எந்தத் தொடர்புமில்லை

## தலிபான்கள் தெரிவிப்பு

(காபூல்)



தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்த தொடர்பும் இல்லை என தலிபான்கள் குறிப்பிட்டனர்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே தலிபான் செய்தித் தொடர்பாளரும் சர்வதேச பேச்சுவார்த்தையாளருமான சுஹைல் ஷாஹீன் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தங்களுக்கு எந்தத்தொடர்பும் இல்லை என்றும் தாங்கள் ஒரு சுதந்திரமான விடுதலைப் படையென்றும் அவர் குறிப்பிட்டார்.

இது கடந்த 20 ஆண்டுகளாக தமது நாட்டின் ஆப்கானிஸ்தானின் விடுதலைக்காக வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடியதாக அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானின் பாமியன் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான புத்தர் சிலை, தலிபான்களால் மார்ச் 2001 ஆம் ஆண்டு அழிக்கப்பட்டது. பழங்கால மணற்கல் சிற்பங்களை அழித்ததை கண்டித்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

இந்த நிலையில், தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவது பௌத்த தளங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற அச்சம் தற்போது உள்ளதாக குறித்த ஆங்கில ஊடகம் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும் தலிபான் தலைமையிலான நிர்வாகத்தின் கீழ் ஆப்கானிஸ்தானில் உள்ள பௌத்த தளங்கள் ஆபத்தில் இருக்காது என்று ஷாஹீன் வலியுறுத்தினார் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்களை பயங்கரவாதிகளாக இலங்கை கருதக்கூடாது என அவர் கூறியதாகவும் தங்கள் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய இலங்கையின் முன்னோர்களைப் போல தாங்கள் ஆப்கானிஸ்தானின் சுதந்திரப் போராளிகள் என அவர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து ஒரு வாரத்தில் தலிபான்கள் ஆப்கானிஸ்தான் முழுவதையும் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு மண் விற்றால் அனுமதிப்பத்திரம் இரத்து



## மன்னார் அரச அதிபர் தெரிவிப்பு

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட விலைக்கு மண் விற்பனை செய்யப்படாது அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் அவர்களின் மண் அகழ்விற்கான அனுமதி பத்திரம் இரத்துச் செய்யப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று மண் அகழ்வில் ஈடுபடுபவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலினை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் அண்மையில் மேற்கொண்ட கள ஆய்வுக்கு அமைவாக அவர்களால் வழங்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் நாங்கள் தற்போது மன்னார் மாவட்டத்தில் 46 அனுமதிப் பத்திரத்தை வழங்கி உள்ளோம். இந்த அனுமதிப் பத்திரங்கள் இலுப்பைக்கடவை, கூராய், அருவியாறு, பெரியமடு, முசலி போன்ற இடங்களில் மண் அகழ்வு செய்ய வழங்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் ஊடாக மக்களுக்கு குறைந்த விலையில்,மண் வழங்கப்பட வேண்டும் என்பதை அறியப்படுத்தி உள்ளோம்.

இதன் அடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இடங்களுக்கு 1 டிப்பர் மணல் மண் 29 ஆயிரம் ரூபாவிற்கும், மன்னார் நகர பிரதேசச் செயலாளர் பிரிவில் 30 ஆயிரம் ரூபாவிற் கும், தலைமன்னார் பிரதேசத்திற்கு 34 ஆயிரம் ரூபாவிற்கும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 32 ஆயிரம் ரூபாவிற்கும் மண் விற்பனை செய்யப்பட வேண் டும் என தீர்மானிக்கப்பட்டது.


குறித்த தீர்மானத்தை உரிய முறையில் அமுல்படுத்த கிராம உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலாளர்களின் கையொப்பத்துடன் சிட்டை வழங்க உள்ளதோடு மண் அகழ்வு செய்பவர்களின் விபரங்களையும் வழங்கவுள்ளோம்.

அமுல் படுத் தப் பட்ட விலையை உறுதிப்படுத்தி மண் விநியோகிக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படும் போது தீர்மானிக்கப்பட்ட விலைக்கு மண் விநியோகித்தார்களா? என்பது தொடர்பாக ஆராயப்பட்ட பின்பே அனுமதிப்பத்திரம் மீண்டும் வழங்கப்படுவது தொடர்பாக ஆராயப்படும்.

மண் அதிக விலைக்கு விற்பனை செய்தால் அல்லது மண் கேட்ட போது வழங்கப்படாது விட்டால் உடனடியாக அவர்களின் விபரங்கள் எங்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவர்களின் அனுமதிப்பத்திரமும் இரத்துச்செய்யப்படும். மக்களின் அவசிய தேவைகளையும், அபிவிருத்தி பணிகளையும் கருத்திற் கொண்டு குறித்த மண் அமுல்படுத்தப்பட்ட விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (7-4-285)

# வவுனியா வைத்தியசாலைக்கு ஒட்சிசன் கருவி அன்பளிப்பு



(நெளுக்குளம்)

கொவிட் தொற்று நோயாளர்களிற்கு சிகிச்சை அளிக்கும் நோக்குடன் வவுனியா வைத்தியசாலைக்கு ஒட்சிசன் இயந்திரம் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டது. குறித்த உபகரணம் பரவகாரோ சந்திர தேரரால் வைத்தியசாலை பணிப்பாளர் க.ராகுலனிடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ரஜரட்ட பல்கலைக்ழகத் தின் வேந்தர் யானா திலக தேரர் மற்றும் முன்னாள் வவுனியா அரச அதிபரும், வட மாகாண பிரதம செயலாளருமான சமன் பந்துலசேன ஆகியோர் இதனை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்திருந்தனர்.

15 இலட்சம் ரூபாய் பெறுமதியான உயர் ஓட்ட நாசி ஒட்சிசன் கருவிஒன்றே வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

(7-4-6-299)



வவுனியா பல்கலைக்கழகத்தினை நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று முன்தினம் நேரடியாக சென்று பார்வையிட்டார்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி. மங்களேஸ்வரன் தலைமையில் பல்கலைகழகத்தின் நிர்வாகிகள் மற்றும் அமைச்சரின் இணைப்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படம் :- சதீஸ்)

# சட்டவிரோதமாக கடத்தப்படவிருந்த 1200 கிலோ மஞ்சள் மீட்பு



(தருமபுரம்)

பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பூநகரி கௌதாரி முனையிலிருந்து கொழும்புக்கு கூலர்ரக வாகனத்தில் அத்தியாவசிய சேவைகள் என போடப்பட்ட பதாகையுடன் ஏனைய அத்தியாவசிய பொருட்களுடன் சேர்த்து கொண்டு செல்லப்படவிருந்த 1200 கிலோ மஞ்சளை பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த மஞ்சள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கிளிநொச்சி கௌதாரிமுனைக்கு கொண்டு வரப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தை கைப் பற்றிய பொலிஸார் வாகனசாரதி மற்றும் உதவியாளரையும் கைது செய்தனர். குறித்த சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-4-316)

# கசிப்பு விற்பனை செய்த பெண்கள் ஐவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றைய தினம் தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 5 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 8.5 லீற்றர் கசிப்புடன் இரண்டு பெண்களும் இராமநாதபுரம் பகுதியில் 6 லீற்றர் கசிப்புடன் இரண்டு பெண்களும் உழவனூர் பகுதியில் 4.5 லீற்றர் கசிப்புடன் ஒருவரும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (7-4-6-316)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

**17.08.2021**
ஆவணி 01, செவ்வாய்க்கிழமை
தசமி பின்னிரவு 2.52 மணிவரை
கேட்டை பின்னிரவு 1.51 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை, வளவன்


மேஷம்

எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், வருமானம் திருப்தி தரும்.


மிதுனம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், அடுத்தவரின் நலனில் அக்கறை கூடும்.


கடகம்

தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், மற்றவரின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.


சிம்மம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தொழில் வளர்ச்சி கூடும்.


விருச்சிகம்

ஆன்மீக பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.


தனுசு

அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியை கூட்டும், சுப செலவுகள் கூடும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.


மகரம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், இலாபகரமான நாள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள்.


கும்பம்

நண்பர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பர், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


மீனம்

எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

உன் திறமைகளை பிறர் புகழட்டும்

# யுத்தத்தின் போது எடுத்த தீர்மானங்களை இப்போது எடுக்க முடியாது

## ரஞ்சித் மத்தும பண்டார

(கொழும்பு)

**யுத்தத்தின் போது எடுத்த தீர்மானங்களைப் போன்று இப்போதும் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,



வரலாற்றில் மிகவும் மோசமான நிலைமையில் தற்போது இலங்கை உள்ளது. கொவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் ஊடகங்களில் பிரசாரங்களை செய்துகொண்டிருந்தாலும் உலகில் அதிக கொவிட் மரணங்கள் பதிவாகும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

மருத்துவமனைகளில் கொள்ளளவுகளை மீறி தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளமையால் வீடுகளிலேயே சிகிச்சையளிப்பதாக அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் இன்று எவ்வித மருத்துவ ஆலோசனைகளும் இன்றி மக்கள் வீடுகளிலேயே உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொய்யான தரவுகளை வெளியிட்டு அரசாங்கம் மக்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்திலுள்ளவர்களே சுகாதார அமைச்சு வெளியிடும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

சரியான நேரத்தில் உரிய தீர்மானங்கள் எடுக்கப்படாமையே தற்போது இந்த நிலைமை ஏற்படக் காரணமாகும்.

மேலும் அரசாங்கத்தில் காணப்படுகின்ற நிதி நெருக்கடியே நாடு முடக்கப்படாமல் இருப்பதற்கான பிரதான காரணியாகும் என அவர் தெரிவித்தார். (7-4)

## மேலும் 2,325 பேர் பூரண குணமடைவு

(கொழும்பு)

இலங்கையில் பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 358,608 ஆக அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக பதிவு செய்யப்படாத 3,640 நோயாளிகளின் உறுதிப்படுத்தலுடன் இந்த கொவிட்-19 நோயாளர்களது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 2,325 நபர்கள் பூரண குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளனர். (7-4)



பூமணி அம்மா அறக்கட்டளை சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸை தலைமைச் செயலகமாகக் கொண்டு இயங்கும் விசு செல்வராசா நிதி பங்களிப்பில் வட்டக்கச்சி வள்ளிபுலம் கிராமத்தில் வசிக்கும் வலு இழந்தோருக்கு ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாய் நிதியில் பொதுக்கிணறு, தண்ணீர் தாங்கி என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.




செஞ் சோலைப் படுகொலையின் 15 ஆவது ஆண்டு நினைவு வேந்தலும் தாய்த் தமிழகத்தில் தமிழீழ மக்களுக்காய் தன் உடலில் தீ மூட்டி ஆகுதியான தோழர் செங் கொடியின் 10 ஆவது ஆண்டு நினைவேந்தலும் பாரிசுபஸ்ரில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மகாத்மா காந்தியின் கோட்பாடுகள் தான் இந்தியாவை சுதந்திரத்தை நோக்கி வழிநடத்தின

### ஜோ பிடன்



(டில்லி)

மகாத்மா காந்தியின் உண்மை, அகிம்சை கோட்பாடுகள் தான் இந்தியாவை சுதந்திரத்தை நோக்கி வழி நடத்திச் சென்றன என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஜோ பிடன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கடந்த 1947 ஆம் ஆண்டு இதே நாளில் மகாத்மா காந்தியின் உண்மை, அகிம்சை கோட்பாடுகளின் வழியில் சுதந்திரத்தை நோக்கிய மிக நீண்ட பயணத்தில் இந்தியா வெற்றி கண்டது.

ஜனநாயக வழியில் இந்திய மக்கள் புரிந்த சாதனை உலகுக்கே முன்னுதாரணமாக இருப்பதோடு, இரு நாடுகளிடையேயான சிறப்பான உறவுக்கும் அடித்தளமிட்டது.

கடந்த பல ஆண்டுகளாக, இரு நாட்டு மக்களிடையேயான நல்லுறவு மற்றும் 40 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய-அமெரிக்கர்களின் துடிப்பான பங்களிப்பானது இரு நாடுகளின் உறவை வலுவானதாகவும், நிலைத்தன்மையுடையதாகவும் மாற்றியிருக்கின்றன.

இரு நாடுகளிடையேயான இந்த நல்லுறவு வரும் நாட்களில் மேலும் மலர வாழ்த்துகிறேன் என்று ஜோ பிடன் தெரிவித்துள்ளார். (7-4)

## இஸ்லாமிய இராச்சி

## வெற்றிப்பிரகடன

(காபூல்)

ஆப்கானிஸ்தானை கிட்டத்தட்ட முழுமைய
மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ள தலிபா
வெற்றிபெற்றுவிட்டதாக பிரகடனப்படுத்தியு

அத்துடன், ஆப்கானிஸ்தானை இஸ்லாமிய இராஜ்ஜியமாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து விரைவில் ஆட்சி அமைப்போம். அது குறித்த விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

தலிபான்கள் காபூல் நகரத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஆப்கானி ஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி நாட்டை விட்டு தப்பிச் சென்று, உஸ் பெகிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த தலிபான்கள் அங்கு தலிபான் தலைவர்கள் கூடியிருக்கும் புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் முழுமையாக தலிபான்கள் வசமாகியுள்ள நிலையில் அங்கு உள்ள அனைத்து மக்களும்

## பதவி விலகிய பிரதமர் காபந்து அரசாக்கிய மன்னர்

(கோலாலம்பூர்)

மலேசிய பிரதமர் பமொஹிதின் யாசின் நேற்று பதவி விலகினார்.

அவரது ராஜினாமாவை மலேசிய மாமன்னர் ஏற்றுக் கொண்டதாக மலேசிய ஊடகத் தகவல் தெரிவிக்கிறன.

நேற்றுக் காலை பிரதமர் மொஹிதின் யாசின் தலைமையில் ஆளும் பெரிக்கத்தான் அரசாங்கத்தின் அமைச்சரைக் கூட்டம் முடிந்த பின்னர் மாமன்னரைச் சந்தித்த பிரதமர் மொஹிதின் யாசின் அவரின் பதவி விலகல் குறித்து மாமன்னரிடம் தெரிவித்தார்.

மலேசியாவில் புதிய அரசு அமையும்வரை காபந்து அரசாக தொடருமாறு பிரதமர் மொஹிதின் யாசினை மாமன்னர் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக மாமன்னர் அரண்மனையின் பேஸ்புக் உத்தியோக பூர்வ பக்கத்தில் மலாய் மொழியில் மன்னரின் முடிவு விபரிக்கப்பட்டுள்ளது.

அதில் அடுத்த பிரதமரை தேர்வு செய்யும்வரை காபந்து அரசாக தொடருமாறு மன்னர் பிரதமருக்கு உத்தரவிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (7-4)

## ஆப்கானில் இந்தியர்களையும் மீட்க பஞ்சாப் முதல்வர் வலியுறுத்தல்

(டில்லி)

ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள 200 சீக்கியர்கள் உட்பட அனைத்து இந்தியர்களையும் உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு பஞ்சாப் முதல்வர் அமரீந்தர் சிங் கடிதம் எழுதியுள்ளார். ஆப்கானிஸ்தானில் வசித்து வந்த 129 இந்தியர்கள் ஏர் இந்தியா விமானத்தில் நேற்று முன்தினம் இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டனர். மேலும், அங்குள்ள இந்தியர்களை மீட்க நேற்று ஏர் இந்தியா விமானம் டில்லியில் இருந்து புறப்படவிருந்த நிலை யில் ஆப்கானில் விமான சேவை ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், பஞ்சாப் முதல்வர் கப்டன் அமரீந்தர் சிங், ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள 200 சீக்கியர்கள் உட்பட அனைத்து இந்தியர்களையும் உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். மேலும்,இந்தியர்களை மீட்க தன்னுடைய அரசு அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். (7-4)

## அமெரிக்க ஜ
## ஆப்கான் நாட

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுக்கு எதிராக வெள்ளை மாளிகைக்கு வெளியே ஆப்கான் நாட்டை சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக அண்மையில் பொறுப்பேற்ற ஜோ பிடன் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து அமெரிக்க வீரர்களையும் திரும்ப அழைக்கும்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் 3 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. டில்லியில் உள்ள அவரது நினைவிடமான "சதைவ் அடல்" இல் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெ[illegible] உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறப்பு

(டில்லி)

ஆவணி மாத பூஜையையொட்டி 8 நாட்கள் தொடர்ச்சியாக சபரிமலையில் பூஜைகள், வழிபாடு நடைபெறவுள்ளது.

பக்தர்கள் தரிசனத்திற்கு 48 மணி நேர இடைவெளியில் எடுக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர். கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் அல்லது 2 டோஸ் தடுப்பூசி போட்டு கொண்டதற்கான சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என திருவிதாங்கூர் தேவஸ்தான நிர்வாகம் தெரிவித்துள்ளது. (7-4)

## ஆப்கானிலிருந்து
## காபூல் விமான நி

(காபூல்)

ஆப்கானிஸ்தானை கைப்பற்றியுள்ள தலிபான்களுக்கு அஞ்சி அங்கிருந்து வெளியேற ஆயிரக்கணக்கானவர்கள் காபூல் விமான நிலையத்தில் குவிந்துள்ள நிலையில் விமான நிலையத்தில் பதற்றமும் பரபரப்பும் நிலவி வருகிறது.

இவ்வாறு குவிந்துள்ளவர்களில் பலர் அமெரிக்க இராணுவத்துக்கு மொழி பெயர்ப்பாளர்களாக கடமையாற்றியவர்கள். அமெரிக்க தூதரகப் பணியாளர்கள் மற்றும் பல வழி களில் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து ஆப்கானிஸ் தானில் பணியாற்றியவர்களாவர்.

இவர்கள் விமான நிலையத்தில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ச்சியமாகும் ஆப்கானிஸ்தான்

## னம் செய்த தலிபான்கள்

**முமையாகக் கைப்பற்றி தலிபான்கள் தாங்கள் டுத்தியுள்ளனர்.**



பாதுகாப்பாக உள்ளனர் என தாலிபன் செய்தித்தொடர்பாளர் சுஹைல் ஷாஹீன் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மக்களின் பாதுகாப்பு முழுமையாக உறுதி செய்யப்படும். அவர்களின் உடைமைகள், உயிர் அனைத்தும் பாதுகாப்பாக இருக்கும். யார் மீதும் பழிவாங்கும் நடவடிக்கை இருக்காது. நாங்கள் இந்த நாட்டு மக்களின் சேவகர்கள்.

அவர்களின் எதிரிகள் இல்லை எனவும் தாலிபன் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, காபூலுக்குள் நுழைந்த தலிபான்கள் அங்குள்ள மிகப்பெரிய சிறைச்சாலையான புல் இ சார்க்கிக்குள் அடைக்கப்பட்டிருந்த தலிபான்களை அடையாளம் கண்டு அவர்களை வெளியேற்றினர்.

மேலும் இஸ்லாமிக் எமிரேட் ஆப்கானிஸ்தான் எனப் பெயர் சூட்டிய தலிபான்கள் புதிய அரசு பதவியேற்றதும் உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் எனவும் கூறியிருந்தனர். (7-4)

## கலைக்கப்படும் கனடா பாராளுமன்றம் செப்டெம்பரில் பொதுத் தேர்தல்

(ஒட்டாவா)

கனடா பாராளுமன்றம் கலைக்கப்பட்டு கூட்டாட்சித் தேர் தல் செப்டெம்பர் 20 ஆம் திகதி நடைபெறும் என்று கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கனடாவின் ஆளுநர் நாயகம் மேரி சைமனைச் சந்தித்த அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் கோரிக்கையை முன் வைத்தார்.

இதனையடுத்துச் செய்தியாளர்களிடம் பேசிய லிபரல் கட்சித் தலைவரான ட்ரூடோ, தனது கோரிக்கையை ஆளுநர் நாயகம் ஏற்று அங்கீகரித்ததாகத் தெரிவித்தார்.

கனடாவின் தற்போதைய பாராளுமன்ற ஆட்சிக் காலம் ஒக்டோபர் 2023 வரை உள்ள நிலையில் முன்கூட்டியே தேர்தலை நடத்தும் பிரதமர் ட்ரூடோ வின் அறிவிப்புக்கு எதிர்க்கட்சி கள் எதிர்ப்புத் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :- 4 377 156**

**தொற்று :- 208 079 612**

**(நேற்றைய மாலை நிலவரம்)**

## க ஜனாதிபதிக்கு எதிராக நாட்டவர்கள் போராட்டம்

திட்டத்தை துரிதப்படுத்தினார்.

இந்தச் சூழலைப் பயன்படுத்தி நேற்று முன்தினம் ஆப்கானை விட்டு ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி வெளியேறியதையடுத்து ஜனாதிபதி மாளிகையை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். இதன்மூலம் போர் முடிவுக்கு வருவதாகவும் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர்.

இதனால் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுக்கு எதிராக வெள்ளை மாளிகைக்கு வெளியே ஆப்கான் நாட்டை சேர்ந்த மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தின் போது பிடன் ஆப்கானுக்கு துரோகம் செய்ததாகவும் அனைத்திற்கும் பிடன் தான் பொறுப்பு என்றும் கோஷங்களை எழுப்பி வருகின்றனர். (7-4)

## துருக்கி வெள்ளப்பெருக்கு; பலியானோர் எண்ணிக்கை 62 ஆக உயர்வு

(இஸ்தான்புல்)

துருக்கியில் உள்ள கருங்கடல் பகுதியில் கடந்த புதன்கிழமை கனமழை பெய்துள்ள நிலையில் பார்டின், கஸ்டமோனு, சினோப் மற்றும் சம்சுன் ஆகிய இடங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன.

இந்த வெள்ளத்தில் சிக்கி இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல் 2,250 இற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளனர். இதனை அடுத்து வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் முயற்சியில் பேரிடர் மீட்பு பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு ள்ளனர்.

மேலும் காஸ்டமோனு பகுதியில் நூற்றுக்கணக்கானோர் மாயமாகி உள்ளதாகவும் தகவல் வெளிவந்துள்ளது. (7-4)

## ந்து வெளியேறும் பொதுமக்கள் ன நிலையத்தில் பதற்ற நிலை

ஆயிரக்கணக்கில் குவிந்து, விமானங்களில் ஏற முண்டியடிக்கும் நிலையில் அவர்களை எச்சரிக்கும் வகையில் அமெரிக்கப் படையினர் வானத்தை நோக்கி நேற்றுக் காலை துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அமெரிக்கா தங்கள் நாட்டு மக்களை வசதியாக விமானங்களில் ஏற்றி பாதுகாப்பாக வெளியேற்றுகிறது.

ஆனால் 20 ஆண்டு களாக அவர்களையே நம்பி, அவர்களின் குரலாக, இராணுவத்துக்கு மொழி பெயர்ப்பாளர்களாக பணியாற்றிய ஆயிரக்கணக்கானவர்களுக்கு உதவவில்லை.

அவர்களை அச்சுறுத்த வானத்தை நோக்கி அமெரிக்கப் படையினர் சுடுகின்றனர்.

இது சுயநலவாதம். இது தான் உலகின் வல்லரசின் நிலைப்பாடு என பலர் இது குறித்து சமூக வலைத்தளங்களில் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

மேலும் ஐந்து பேர் உயிரிழந்ததாகவும் உடல்களை வாகனத்தில் எடுத்துச் செல்லப்படுவதைப் பார்த்த சாட்சியங்கள் உண்டு எனவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் உயிரிழப்பின் காரணிகள் சரியான முறையில் தெளிவுபடுத்தப் படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (7-4)

## நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டால் தலிபான்களோடு இணைந்து செயற்பட தயார்

### அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

(வோஷிங்டன்)



தலிபான்கள் தங்கள் மக்கள், பெண்கள் மற்றும் சிறுமிகளின் "அடிப்படை உரிமைகளை" மதித்தால் மற்றும் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவில்லை என்றால் அவர்களுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது என்று அமெரிக்க வெளி யுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சில தினங்களுக்கு முன் இந்தியா, அமெரிக்கா, சீனா உட்பட நாடுகளின் பிரதிநிதிகள், டோகா நகரில் நடத்திய கூட்டத்தின்போது ஆயுதப் போராட்டம் மூலம் ஆப்கான் கைப்பற்றப் பட்டால் அந்நாட்டை அங்கீகரிக்கமாட்டோம் என அறிவித்தன.

இந்த நிலையில் தான் தலிபான்களை ஜோ பிடன் நிர்வாகம் அங்கீகரிக்குமா என்ற கேள்விக்கு அண்டனி பிளிங்கன் மேற்கூறியவாறு பதிலளித்துள்ளார். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி ஆட்களை வீட்டிற்குள் அனுமதிக்காதீர்கள்!

# வீட்டிற்குள்ளும் முகக்கவசம் அணியுங்கள்

## எச்சரிக்கிறார் மருத்துவர் தீபால் பெரேரா

(கொழும்பு)

**டெல்டா வைரஸ் மிக வேகமாக பரவி வருவதால் வீட்டில் இருக்கும் போது கூட முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்குங்கள் என லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

வீட்டில் உள்ள ஒருவர் கழிவறை மற்றும் குளியலறையை பயன்படுத்திய 15 நிமிடங்களுக்குப் பிறகே, அதை மற்றவர்கள் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் வைரஸிலிருந்து தப்பிக்கலாம்.

காரணம் வைரஸ் தொற்றுவதற்கு 15 நிமிடங்கள் வரை ஆகும். ஆகவே ஆபத்தான இடங்களில் 15 நிமிடங்கள் அல்லது அதற்கும் மேல் முகக்கவசங்களை அகற்றுவதன் மூலம் நம்மில் இலகுவாக தொற்று ஏற்பட்டு விடும் என்று அவர் குறிப்பிடுகிறார். மேலும், இந்தியாவிலும் அமெரிக்காவிலும், டெல்டா வகை வைரஸ் குழந்தைகளிடையே வேகமாக பரவிவருவதால், உங்கள் குழந்தையை வீட்டுக்குள் வைத்துக்கொள்ளவும், வெளியாட்களை வீட்டிற்குள் நுழைய விடாதீர்கள் என்றும் வைத்திய நிபுணர் வலியுறுத்தினார். (நி-5)

## வீதி விபத்துக்களால் இவ் வருடத்தில் இதுவரை 1500 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் வீதி விபத்துக்கள் காரணமாக பத்து உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவற்றில் ஒன்பது பேர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் என்பதுடன் ஒருவர் முச்சக்கர வண்டியில் பயணித்தவர் ஆவார்.

இலங்கை பொலிஸாரின் புள்ளி விபரங்களின்படி, ஒவ்வொரு நாளும் ஏழிலிருந்து எட்டு பேர் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழக்கின்றனர்.

நாட்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 8.3 மில்லியன் மற்றும் அதில் 60 சதவீதம் மோட்டார் சைக்கிள்கள் என பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இதுவரை வீதி விபத்துகளால் சுமார் 1500 பேர் உயிரிழந்துள்ளனர். (நி-5)

## களியாட்ட நிகழ்வுகளை தடுக்கவே இரவு நேர ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

நாட்டில் இரவு நேரங்களில் களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதன் காரணமாகவே இரவில் மாத்திரம் ஊரடங்கை அமுல்படுத்த தீர்மானித்ததாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (நி-)





இலங்கைக்கு மேலுமொரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டன. அதற்கமைய, ஒரு இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் நேற்று திங்கட்கிழமை காலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன.




**லோஜிதா**




**பெபிஷனன்**




**மோனிக்ஷன்**




**பார்த்திபன்**




**பிரதீபா**




**கார்த்திபன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் மாத்திரம் பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கொவிட்-19 நிலைமைகள் காரணமாக இந்த வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வு ஒரு நாள் மாத்திரம் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்றில்நேற்று காலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்துள்ளார்.

அதன்படி இவ்வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த சில நாட்களாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கொவிட் -19 இற்கான சோதனை செய்ததை அடுத்து இந்த வார பாராளுமன்ற கூட்டங்களை இடைநிறுத்த எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக ஒகஸ்ட் 17ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 20ஆம் திகதி வரை நான்கு நாட்கள் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# முன்னாள் அமைச்சர் அகிலவிராஜின் தந்தை காலமானார்



(கொழும்பு)

முன்னாள் கல்வி அமைச்சரும் குருநாகல் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அகிலவிராஜ் காரியவசமின் தந்தையான அல்பர்ட் காரியவசம் காலமானார்.

சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தனது 84ஆவது வயதில் நேற்று காலமானார்.

வயம்ப பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளராக செயற்பட்டு வந்த அன்னார் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் பிரபல வர்த்தகர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பயணத்தடையை மீறினால் கைது வாகனமும் பறிமுதல் செய்யப்படும்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை மீறி பயணிப்பவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், அவர்கள் பயணிக்கும் வாகனங்களையும் கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாண எல்லைகள் வரையில், பேருந்துகளில் பயணித்து, பின்னர் அங்கிருந்து நடைபாதையாக சென்று, வேறு பேருந்துகளின் மூலம் சிலர் பயணிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்றால், குறித்த பேருந்து உரிமையாளர், சாரதி, நடத்துநர் உட்பட தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், குறித்த பேருந்தை பொலிஸாரின் பொறுப்பில் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கொவிட் தொற்று குணமடைந்த தாய்; வீட்டிற்கு அழைத்துச் செல்ல மகள் மறுப்பு

(கொழும்பு)

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு, தற்போது குணமடைந்து வரும்ஒரு தாய் தனது ஒரே மகள் தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்ல மறுத்ததால் மினுவாங்கொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கண்ணீர் மல்க தெரிவித்தார்.

கம்பஹா மருத்துவமனையில் ஏற்பட்ட தொற்று காரணமாக தன்னை மினுவாங்கொட மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், தான் இப்போது குணமடைந்து வருவதால் தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்ல மகள் மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தலவத்துகொடவில் வசிக்கும் 55 வயதான தாயார் தம்மிகா ஜெயவீரா, தனது மகளின் தொலைபேசி எண்ணிற்கு அழைப்பை ஏற்படுத்தினாலும் அவர் அதற்கு பதிலளிக்கவில்லையெனவும் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சுதேசி சிந்தனை

ஒரு நண்பர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். நமது தேசம் மேல்நாடு மாதிரி ஆக வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். நமது தேசம் நமது தேசம் மாதிரி ஆகிறது தான் முக்கியம்.

நமது நாடு மேல்நாடு மாதிரி ஆகுவதில் நமக்கு என்ன பெருமை? இன்னொருத்தரை பார்த்துவிட்டு நாங்களும் அவரை மாதிரி ஆக வேண்டும் என்று செயற்படுகிற முயற்சியிலே எம்மை நாம் இழந்துவிடுவோம். அதிலே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அடுத்தவர்களைப் பார்த்துவிட்டு அவர்கள் மாதிரியே ஆகிவிட்டோம் என்றால் நம்மை நாம் தொலைத்துவிட்டு நாம் எங்கே இருக்கின்றோம் என்று தேடிக் கொண்டு நிற்போம்! இது ஒரு விபரீதமான நிலைமை! இப்படி ஆகி விடக்கூடாது.

ஒரு தடவை மகாத்மா காந்தி காசிக்குப் போயிருந்தார். அங்கே மதன் மோகன் மாளவியாவை சந்தித்தார். "இங்கிலாந்து ராணியிடம் இருந்து எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள கூப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அதிலே கலந்து கொள்வதற்கு சில நிபந்தனைகள் விதித்து இருக்கிறார்கள்.

அது என்ன நிபந்தனை என்றால் ராணியை பார்க்க வருபவர்கள் பாண்ட், கோட், சூட், ரை, தொப்பி எல்லாம் போட்டுக் கொண்டு வரவேண்டும். ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும். இது தான் நிபந்தனை" என்றார். அது மட்டுமில்லை "இந்த நிபந்தனை நான் ஏற்க முடியாது, அதனால் இங்கிலாந்து ராணியின் அழைப்பை நிராகரிக்கிறது என்று நான் முடிவு செய்திருக்கின்றேன்." என்றார் காந்திஜி.

இதைக்கேட்டதும் மாளவியாஜி சொன்னார். "எனக்கும் கூட அப்படி ஒரு அழைப்பு வந்திருக்கின்றது இங்கிலாந்து ராணியிடமிருந்து, நான் அதிலே கலந்து கொள்வதற்காக சொல்லி பதில் எழுதியிருக்கின்றேன்" என்றார்.

மதன் மோகன் மாளவியாஜி இப்படி சொன்னது கேட்டதும் காந்திஜிக்கு ரொம்ப ஆச்சரியம். ஏன் என்றால் அவர் இவரை விட தீவிரமான சுதேசி சிந்தனையுடையவர். காசியில் விஸ்வ வித்தியாலய யாவை உருவாக்கி நம்முடைய பண்பாடு கலாச்சாரம் இதுவெல்லாம் போதித்துக் கொண்டிருப்பவர். அப்படிபட்டவர் எப்படி அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்?

இப்படியே யோசித்துக் கொண்டிருக்கும் போது மாளவியா தான் அனுப்பியிருக்கும் பதில் கடிதத்தினுடைய நகலை கொடுத்தார். படித்துப் பாருங்கள் என்று, வாங்கிப் பார்த்தார் காந்திஜி.

அதிலே என்ன எழுதியிருக்கிறது தெரியுமா? நான் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்கின்றேன். ஆனால் நான் இந்தியா நாட்டின் பிறந்து வளர்ந்ததால் எனக்கு பழக்கமான உடை அணிந்து தான் வருவேன். ஏனேன்றால் நான் இந்த நாட்டின் பிரதிநிதியாகத்தான் அந்த மாநாட்டில் கலந்து கொள்வேன்.

அதனால் அந்த நாட்டு உடையிலே வரவேண்டியிருக்கும். ராணியார் பல மொழிப்பெயர்பாளர்களை அமர்த்தி கொள்ளவும் வசதி படைத்தவர். அதனால் என்நாட்டு மக்கள் சார்பாக நான் பேசுகிற மொழியை மொழிப்பெயர்க்க நீங்கள் ஏற்பாடு செய்ய முடியும்! ராணியார் மாளிகையிலே என்னுடைய சௌகரியத்திற்கு வேண்டிய வசதிகளை செய்வது ரொம்ப சுலபம் என்று நினைக்கின்றேன். நான் தினமும் கங்கை நீரிலே தான் குளிக்கின்றேன். கங்கை நீரைத் தான் குடிக்கின்றேன்.

அதனால் ராணியாரின் விருந்தினராக இருக்கின்ற வரைக்கும் எனக்கு இந்த வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். என்று எழுதியிருந்தார் அந்த கடிதத்தில்!

வட்ட மேசை மாநாடு நடந்தது அதில் காந்திஜியும் மாளாவியாஜியும் சுதேசி உடையிலே கலந்து கொண்டார்கள். அதுமட்டுமில்லை அந்த ஏழு நாளும் அவர்கள் விரும்பிய படி இந்தியாவில் இருந்து கங்கை நீரை எடுத்துக் கொண்டு போய்க் கொடுக்கிறதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பாருங்கள் சுதேசி கொள்கையிலே அவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தி ஒரு நாள் பெங்களூர் வந்தபோது விஸ்வேஸ்வர்ய்யாவை சந்தித்தார். சேர் விஸ்வேஸ்வரய்யாவை இயந்திமாக்கும் கொள்கையை தீவிரமாக ஆதரித்தவர். இயந்திரமயமாக்கு அல்லது அழிந்து போகுவது தான் அவருடைய கோஷமாக இருந்தது.

விஸ்வேஸ்வர்ய்யா காந்திஜிடம் யோசனை கேட்டார். இந்த கோஷத்தை பற்றி "இயந்திரமயமாக்கும் அல்லது அழிந்து போகும் இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன" என்று கேட்டார்.

காந்திஜீ அதைப் பாராட்டினார். இருந்தாலும் அதிலே ஒரு சின்ன திருத்தம் செய்தால் நல்லாக இருக்கும். "என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார் அவர்.

"இயந்திரமயமாக்கு அல்லது அழிந்து போ என்று சொல்வதற்குப் பதிலாக 'இயந்திரமயமாக்கி அழிந்து போ' இப்படி இருக்கலாம்" என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

**10**

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**பி**ன்னர் மத்திய அரசு தனக்குரிய சேவைகளை உருவாக்கி விண்ணப்பம் கோரி நியமனங்கள் செய்யலாம்.

இங்கோ எல்லாம் தலைகீழாக நடக்கிறது. பொலிஸ்காரரிடம் நீங்கள் மாகாண அரசின் கீழ் வேலை செய்கிறீர்களா? என்று கேட்கிறார்கள். மாகாண அரசாங்கம் என்றதே நாட்டிற்கு புதிதான அம்சமாகும். இந்த நிலையில் வர விரும்புவார்களா? என்பது சிந்தனைக்குரியது. மத்திய அரசு இதனைச் சாதமாகப் பயன்படுத்தி மத்திய அரசிலா? பணிபுரியப் போகிறீர்கள் என்ற முடிவை உத்தியோகத்தர்கள் கைகளில் விட்டிருக்கிறது. இதன் மூலம் பொலிஸ்காரர்கள் மாகாண சபையில் வேலை செய்யத் தயாராக இல்லை என்று காட்டுவதற்காவே இந்தக் கணிப்பீடு நடக்கிறதென்று நான் கருதுகிறேன்.

எனவே பொலிஸ் சேவை மற்றும் ஏனைய சேவைகளில் உள்ளவர்கள் உடனடியாக மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று இச் சபை கோரவேண்டும்.

பதின் மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் 28 ஆம் பக்கத்திலே தேசிய பொலிஸ் பிரிவினால் கட்டுப்பாடு செய்யப்பட வேண்டிய தவறுகள் பற்றிய பட்டியல் உள்ளது. அரசாங்கத்திற்கெதிரான தவறுகள், ஆயுதப்படையினர் தொடர்பான தவறுகள், நாண யங்கள் மற்றும் முத்திரைகள் தொடர்பான தவறுகள், ஜனாதிபதிக்கெதிராகப் புரியப்படும் தவறுகள், பகிரங்க அலுவலர், அமைச்சர்கள் மற்றும் நீதிபதிகளுக்கெதிராக புரியப்படும் தவறுகள், அரசாங்க சொத்துக்கள், கம்பளி மற்றும் தாபன ஆதனங்கள் தொடர்பில் புரியப்படும் தவறுகள், தேசிய பாதுகாப்பு. அத்தியாவசிய சேவைகளுக்கெதிரான தவறுகள், ஜனாதிபதியினால் அவ்வப்போது வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படும் தவறுகள் சர்வதேச குற்றங்கள் என்பனவையாகும்.

இவ்வளவையும் தேசிய பொலிஸ் பிரிவு செய்வதாக இருந்தால் மாகாண பொலிஸ்க்கு என்ன வேலை? சம்பளம் வேண்டி படுத்திருக்க வேண்டியதுதான்.

ஆகவே எமக்கு வழிகாட்டியாக உள்ள இந்தியாவின் அமைப்பையும் சட்டவிதிகளையும் பின்பற்றி மாகாண பொலிஸ் அமைப்பை ஆற்றலுள்ளதாக செயற்படச் செய்யத் தக்கவகையில் 13ஆம் திருத்தச் சட்டத்தினை மாற்றியமைக்க வேண்டுமென்று இச்சபை கோர வேண்டும்.

இல்லையேல் மாகாணப் பொலிஸும் தேசியப் பொலிஸும் வீதிக்கு வீதி சண்டைபிடிக்கும் நிலைமையே உருவாகும்.

அவரது ஆறாவது பிரேரணை ஆயுதப் படைகள் சம்பந்தமானது.

### ஆயுதப்படைகள்

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆயுதப்படை கள் மற்றும் ஏனைய சேவைகளில் தேசிய இன விகிதாசாரம் பிரதிபலிக்கப்படல் வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இன விகிதாசாரத்தை பராமரிப்பதற்குரிய எந்தவித முன் நடவடிக்கைகளும் (கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த போதிலும்) இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தரைப்படை, கடற்படை, விமானப் படை போன்றவற்றில் தற்போது வெற்றிடங்கள் நிரப்பப் பட்டு வருகின்றன, நிரப்பிய பின்னர் சொல்வார்கள் வெற்றிடங்கள் இல்லை என்று. எனவே உடனடியாக நியமனம் செய்யப்படுவதை நிறுத்த வேண்டுமென்றும் தேசிய இன விகிதாசாரத்திற்கேற்ப நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் இந்தச்சபை கோரவேண்டும்.

பேச்சு வார்த்தையின்போது ஜனாதிபதி, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஆகியோர் பிரேரித்ததன் பிரகாரம் "தமிழ் பேசும் இராணுவ ரெஜிமன்ற்" ஒன்றை அமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் இப்போது கேட்கிறார்கள் இராணுவத் தொண்டர் படையை உருவாக்குவோமா? என்று அதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. உருவாக்க ஒப்புக் கொண்ட "தமிழ் பேசும் இராணுவ ரெஜிமன்ற்" உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இச்சபை கோர வேண்டும்.

ஆயுதப்படைகளிலும், ஏனைய சேவைகளிலும் தேசிய இன விகிதாசாரம் பேணப்பட வேண்டுமென்று இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதால் இந்தியாவிற்கும் இவ்விடயத்தில் பொறுப்பு இருக்கின்ற தென்பதை இச் சபை உணர்த்த வேண்டும்.

அவரது இன்னுமொரு பிரேரணை இலங்கை இராணுவ முகாம்கள் சம்பந்தமானது.

> ஆயுதப்படைகளிலும், ஏனைய சேவைகளிலும் தேசிய இன விகிதாசாரம் பேணப்பட வேண்டுமென்று இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் இந்தியாவிற்கும் இவ்விடயத்தில் பொறுப்பு இருக்கின்றதென்பதை இச் சபை உணர்த்த வேண்டும். "வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள்.

### இலங்கை இராணுவமுகாம்கள்

இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் இலங்கை இராணுவ முகாம்கள் எதற்கு இருக்கின்றது? மாகாண அரசாங்கம் ஒன்று இங்கு இருக்கின்ற நிலையில் சிவில் நிர்வாகத்தை நடத்துவதற்கு இராணுவ இணைப்பதிகாரிக்கு எந்தவித கட்டுப்பாடும் கிடையாது. தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களி லிருந்து இலங்கை இராணுவமுகாம்களை பின்வாங்கிக் கொள்ளுமாறு இந்தச் சபை தீர்மானிக்க வேண்டுமென்று நான் பிரேரிக்கிறேன்.

அத்தோடு இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தின் பின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவமானது பல அத்துமீறல்களைப் புரிந்திருக்கின்றது. மகாறம்பைக்குளம், அரிப்புபோன்ற இடங்களில் அத்துமீறல்களையும் கொலைகளையும் புரிந்திருக்கின்றனர்.

இந்த அத்துமீறல்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள விசாரணைக் கமிசனை இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்தச் சபை கோரவேண்டும்.

அத்தோடு சிவில் நிர்வாகங்களில் இராணுவத் தலையீடு ஏற்படுவதை முற்றாகத் தடுக்க வேண்டும். இராணுவ இணைப்பதிகாரி சிவில் நிர்வாகங்களில் தலையிடுவது தடை செய்யப்படுவதுடன் அத்தகைய பதவியை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிவில் நிர்வாகங்களில் அவர்களைத் தலையிட வேண்டாம் என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டு மென்றும் இச் சபை கோர வேண்டும்.

மேலும் பட்டின சபைகள், நகர சபைகள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டிடங்கள் மற்றும் அரசாங்கப் பொதுக்கட்டடங்களில் இயங்கி வரும் இலங்கை இராணுவ முகாம்கள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு பழைய முகாம்களுக்கு அவர்கள் திரும்பிச் செல்ல மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்தச் சபை கோர வேண்டும்.

பாதுகாப்பு ஒழுங்கு சம்பந்தமான முதல் அமைச்சரின் முன் மொழிவு

### பாதுகாப்பு ஒழுங்கு

நாட்டில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் காரணமாக தமிழ் பேசும் மக்கள் பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்ய முடியவில்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத் தலைநகரமான திருகோணமலைக்கு போக்குவரத்து செய்வதென்பது உத்தரவாத மற்ற நிலையிலேயே இருக்கிறது.

மாகாண சபை உறுப்பினர் ஒருவர் திருகோணமலைக்கு வருவதென்றால் கொழும்புக்குப் போய் அங்கிருந்து வரவேண்டும். நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் பாதுகாப்பு நெருக்கடிகள் காரணமாக அன்றாடம் பொது மக்கள் மட்டுமல்ல மாகாண அரசும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

இதற்கொரு தீர்வினைக் காணுமாறு மத்திய அரசாங்கத்தை இந்தச் சபையானது வற்புறுத்த வேண்டும். நிர்வாகத் தலைநகரம் சிறப்புற இயங்கி மக்களோடு நெருக்கமாக இருக்க வேண்டுமானால் பாதுகாப்பு ஒழுங்குகள் ஸ்திரப்படுத்தப்படல் வேண்டும். அந்தப் பாதுகாப்பினை ஏற்படுத்தக் கூடியதாக அதிகாரப் பரவலாக்கலை மிக விரைவில் செய்யுமாறு இந்தச் சபை கோர வேண்டும்.

அவரது இன்னுமொரு பிரேரணை முடிக்குரியகாணிகள் சம்பந்தமானது

### முடிக்குரிய காணிகள்

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்நாட்டு விவசாயிகளிடமிருந்து பறித்தெடுத்த நிலங்களையே "முடிக்குரிய காணி"களாகப் பிரகடனப்படுத்தியதுடன் பிரித்தானிய பிரஜைகளுக்கு விற்றார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷமிகளால் மீன்பிடிப் படகுகள் தீக்கிரை



(திருமலை)

திருகோணமலை கும்புறுபிட்டி நாவற்சோலை கடற்கரையில் மீன்பிடிப் படகுகள் இனந்தெரியாத நபர்களினால் எரியூட்டப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் இடம்பெற்றது.

இதன் போது நான்கு படகுகள் முற்றாக எரியூட்டப்பட்டதுடன் இரண்டு படகுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டன.

இச் சம்பவம் தொடர்பில் பொது மக்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரை கைது செய்தனர்.

மீனவர்களுக்கு இடையிலான பகையே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### தீர்க்க சுமங்கலி வரம் அருளும் வரலட்சுமி நோன்பு



பூஜையின் போது அஷ்ட லட்சுமி ஸ்தோத்திரம், கனகதாரா ஸ்தோத்திரம், மகா லட்சுமி ஸ்தோத்திரம் ஆகியவற்றை படிக்க வேண்டும். பின் கலசத்தை அரிசி பாத்திரத்திற்குள் வைப்பது விசேஷம்.

சுமங்கலி பெண்கள் இந்த விரதத்தின்போது தாலிக்கயிற்றை வைத்து பூஜை செய்து அதனை அணிந்து கொள்ள வேண்டும். வரலட்சுமி விரதம் கடைப்பிடிப்பதால் மாங்கல்ய பாக்கியம் நிலைக் கும். செல்வம் சேரும். கன்னிப் பெண்களுக்கு திருமணம் நிச்சயமாகும். குழந்தைகளுக்கு கல்வி ஞானம் கிட்டும். அம்பிகையின் அருளால் விரும்பிய நலன்கள் அனைத்தும் கிடைத்து வாழ்க்கை வளமாகும்.

**மகாலட்சுமி இருக்கும் வீடு**

அஷ்ட லட்சுமிகளில் ஒவ்வொரு லட்சுமியும் நமக்கு தேவையானதை வாரி வழங்குகின்றனர். குழந்தைப் பேறு தருபவள் 'சந்தான லட்சுமி'. பதவியை தருபவள் 'கஜலட்சுமி', செல்வத்தை தருபவள் 'வித்யாலட்சுமி'. வீரத்தை தருபவள் 'வீர லட்சுமி'. வெற்றியை தருபவள் 'கருணை லட்சுமி'.

எல்லா செல்வமும் ஒரு சேர இருக்கும் இடத்தில் இருப்பவள் 'அஷ்ட லட்சுமி'. மகாலட்சுமி ஒவ்வொரு வீட்டிலும் கடாட்சம் செய்ய அதிகாலை எழுந்ததும் கொல்லைப்புற வாசலை திறந்து வைத்து அதன் பின் தலைவாசலை திறக்க வேண்டும்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ஐந்து முகம் கொண்ட குத்து விளக்கை ஏற்றி வழிபட வேண்டும். வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், தண்ணீர் கொடுக்க வேண்டும். மஞ்சள் கிழங்கு கொடுக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் செய்த பாவம் விலகும்.

பௌர்ணமி தோறும் மாலையில் குளித்து சத்ய நாராயணரை துளசி, செண்பக மலர்களால் அர்ச்சனை செய்து பால், பாயாசம், கற்கண்டு, பழ வகைகள் வைத்து வணங்கிய பின்னர் இரவு உணவு உட்கொள்ள வேண்டும்.

ஒருவர் தனக்கு சீராக அளிக்கப்பட்ட வெள்ளிப்பாத்திரங்களை தன் காலத்தில் விற்கவோ, அன்பளிப்பாக கொடுக்கவோ கூடாது. ஏழு வெற்றிலை, பாக்கு, திருநீறு, ஆடை, பொன் போன்றவற்றை இரு கரங்களால் ஏற்க வேண்டும். வளையல், சீப்பு, கண்ணாடி, கண் மை, மஞ்சள், குங்குமம் ஆகியவற்றை தேங்காயுடன் முறத்தில் வைத்து தானம் அளிப்பவருக்கு லட்சுமி விரும்பிய வரங்களை அளிக்கிறார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 24 மணி நேரத்தில் 253 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணி முதல் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 253 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் 54 ஆயிரத்து 612 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மேல் மாகாண எல்லைகளில் மாகாண எல்லைகளை கடக்க முற்பட்ட ஆயிரத்து 220 வாகனங்களில் பயணித்த 2 ஆயிரத்து 411 வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் 361 வாகனங்களில் பயணித்த 479 நபர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். (ரி-5)

## தொடருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையில் நடமாட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், தொடருந்து சேவைகள் 64 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடருந்து திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பிரதான மார்க்கத்தில் பயணிக்கும் தொடருந்துகள், அம்பேபுஸ்ஸ வரையில் பயணிக்க உள்ளன.

புத்தளம் மார்க்கத்தில் பயணிக்கும் தொடருந்துகள் கொச்சிக்கடை வரையிலும், கரையோர மார்க்கத்தில் பயணிக்கும் தொடருந்துகள் அளுத்கம வரையிலும் மாத்திரம் சேவையில் ஈடுபடும் என்றும் தொடருந்து திணைக்கள பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ரி-5)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 170 | 160 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 |
| தக்காளி | 100 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 180 | 170 | 180 |
| கரட் | 160 | 160 | 180 |
| பூசணி | 100 | 80 | 120 |
| புடோல் | 100 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 160 |
| பயற்றங்காய் | 140 | 170 | 120 |
| லீக்ஸ் | 200 | 250 | 240 |
| பீற்றூட் | 120 | 90 | 100 |
| கறிமிளகாய் | 250 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 200 |
| போஞ்சி | 250 | 330 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 |
| இராசவள்ளி | - | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 260 |
| முள்ளங்கி | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 60 |
| வல்லாரை | 20 | 70 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராஜா நல்ல ராஜா!



ஏனென்றால் அந்த இடத்தில் ஒரு பிரிந்தும் பிரியாததுமாக கிழிந்த காய்ந்த, ஓலைகளுடன் கூடிய ஒரு சிறு குடிசை இருந்தது.

அந்தக் குடிசையின் சுற்றுச்சுவர்கள் வெறும் களிமண்ணால் பிசைந்து கட்டப்பட்டு இருந்தது.

அந்த ஓலைக் குடிசையை சுற்றி துவைக்கும் கல்லும், முக்கூட்டுக் கற்களால் அடுக்கப்பட்ட ஒரு சிறு அடுப்பும், ஏழெட்டு நைந்து போன துணிமணிகளும், அலுமினியக் குவளைகளும் கிடக்கும்.

குடிசையை சுற்றி நாகவாளி செடி நிறைந்து இருக்கும். இத்தனை அற்புதமான ஒரு தோட்டத்தின் நடுவே இத்தனை கோரமான பஞ்சக்குடிசை ஒன்று ஏன் உள்ளது என்ற யாருக்குமே புரியவில்லை.

எனினும் அந்தக் காரணத்தை பேரரசரிடம் கேட்கும் தைரியமோ அல்லது அந்தக் குடிசை இருப்பது தோட்டத்தின் எழிலைக் கெடுப்பதாக உள்ளது என்று கூறவோ யாருக்கும் துணிவே வரவில்லை.

நாட்கள் சென்றன. மகிபாலன் என்றொரு சிற்றரசன் அந்த தோட்டத்தைக் காண வந்தான்.

வழக்கம் போல மன்னருடன் சேர்ந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தபடி அரசனைப் பலவிதமாகப் புகழ்ந்தபடி வந்தான்.

திடீரென அவன் கண்கள் குடிசையைக் கண்டது. உடனே முகம் வாடினான்.

அத்தனை எழிலான தோட்டத்தில் இப்படி ஒரு ஏழ்மை தோற்றமுடன் கூடிய குடிசை ஒன்று இருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்தான். (தொடரும்)

# மகாபாரதம்




மறுநாள் கண்ணன், நாரதர் உட்பட அனைவரும் தருமத்தின் இருப்பிடமான குருஷேத்திரம் வந்தனர்.

அனைவரும் அம்புப் படுக்கை யில் இருந்த பீஷ்மரிடம் சென்றனர்.

தருமர் பீஷ்மரை கையெடுத்துக் கும்பிட்டார். பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர்களும் மற்றவர்களும் சிரம் தாழ்த்தி அவரை வணங்கினர்.

அப்போது நாரதர் அனைவரையும் நோக்கி "கங்கை மைந்தரிடம் அறிய வேண்டிய அனைத்து தர்மங்களையும் கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள். இந்தப் பீஷ்மர் சூரியன் போல மறைய இருக்கிறார்.

ஆகவே அவரிடம் நெருங்கிச்சென்று வேண்டியதைக் கேளுங்கள் சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்றார். நாரதர் சொன்ன மொழிகளைக் கேட்டதும் அனைவரும் பீஷ்மரை நெருங்கினர். ஆனால் வாய் திறந்து பேச அஞ்சினர். அப்போது தருமர் கண்ணனிடம் "கண்ணா உம்மைத் தவிரப் பாட்டனாரிடம் பேசும் சக்தி இங்கு யாருக்கும் இல்லை. ஆதலால் நீரே பேசும்" என்று வேண்டிக் கொண்டார்.

பின் கண்ணனே தன் பேச்சை ஆரம்பித்தார். "கங்கை மைந்தரே இரவு நேரம் நன்கு கழிந்ததா? சோர்வு போனதா? ஞானங்கள் அனைத்தும் தோன்றுகிறதா?" என்று வினவினார்.

உடன் பீஷ்மர் "கண்ணா உம் அருளால் என் உடல் எரிச்சல்கள் தொலைந்தன. மயக்கம் விலகியது. இப்போது தெளிந்த சிந்தனையுடன் உள்ளேன்.

கண்ணா நீ வரம் அளித்தபடி எல்லாத் தருமங்களும் மனதில் ஒளிவிடுகின்றன.

ராஜதருமம், ஆபத்துத் தருமம், மோட்ச தருமம் ஆகிய அனைத்துத் தருமங்களையும் அறிகின்றேன்.

எந்தத் தருமத்தில் எப் பிரிவைக் கேட்டாலும் விளக்கமாகச் சொல்கிறேன். கண்ணா உன் புண்ணியத்தால் நான் திரும்பவும் இளைஞன் போல உணருகிறேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பில் எத்தனையோ விஷயங்கள் அடங்கி யுள்ளன. உள்ளக் கதவைத் திறந்து உண்மையை அறியும் திறவுகோல் சிரிப்பே.
– தாமஸ் கார்லைல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிகாரம் இல்லாத அமைச்சராக யார் இருந்தால்தான் என்ன?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாட்சியில் அமைச்சுப் பதவிகள் மாற்றப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராக இருந்த தினேஷ் குணவர்த்தன கல்வி அமைச்சராகவும் இடம்மாறியுள்ளனர்.

ஐ.நா கூட்டத் தொடரைச் சமாளிப்பதற்காக, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டதாக தென் பகுதி அரசியலில் பேசப்படுகிறது.

ஐ.நா கூட்டத் தொடருக்காகப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு வெளிவிவகார அமைச்சுப் பதவி வழங்கப்பட்டதாயின்,

கல்வி அமைச்சராக பேராசிரியர் ஜி.எல். பீரிஸை நியமிக்கும்போது ஐ.நா கூட்டத் தொடரை எதிர்கொள்ள வேண்டி வராது என ராஜபக்ஷ தரப்புக் கருதியதா? என்ற கேள்வி எழும்.

எதுவாயினும் தினேஷ் குணவர்த்தனவிடம் இருந்த வெளிவிவகார அமைச்சுப் பதவியை பறித்து பேராசிரியர் பீரிஸிடம் கொடுத்துவிட்டு, பேராசிரியர் பீரிஸிடம் இருந்த கல்வி அமைச்சை தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்கியிருந்தாலும் அஃது அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு மனக் கஷ்டத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இதேபோல பவித்திரா வன்னியாராச்சியிடம் இருந்த சுகாதார அமைச்சு கெஹலிய ரம்புக்வெலவிடம் வழங்கப்பட்டதில் இருந்து பவித்திரா வன்னியாராச்சியின் செயற்றிறன் போதாது என்ற கருத்து நிலை ஏற்படும்.

அதாவது கொரோனாத் தொற்று உச்சமடைந்திருக்கக்கூடிய இந்த நேரத்தில், பவித்திரா வன்னியாராச்சியிடம் இருந்த சுகாதார அமைச்சு எடுக்கப்பட்டதில் இருந்து கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் அமைச்சர் பவித்திராவின் செயலாக்கம் போதாது என்ற அபிப்பிராயம் உருவாகுவது தவிர்க்க முடியாததே.

ஆக, அமைச்சுக்களை மாற்றுவதென்பது அரசாங்கத்தின் பலவீனமாகப் பார்க்கப்படுகின்ற நிலைமையுள்ளது.

எனவே அமைச்சுகளில் ஏற்பட்ட அதிரடி மாற்றங்கள் அரசாங்கத்தின் எதிர்கால ஆரோக்கியத்துக்கு அவ்வளவு நல்லதல்ல என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, அமைச்சுப் பதவி என்பதும் உரிய அதிகாரங்களுடன் வழங்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து அதிகாரம் இல்லாத – தீர்மானம் எடுக்க முடியாத அமைச்சராக யார் இருந்தாலும் அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படமாட்டாதென்பதுதான் உண்மை.

ஆக, ஆட்சிப்பீடத்திலும் அதிகாரப் பரவலாக்கல் இல்லை என்றால், எல்லாம் அம்போதான்.

# சந்தேக நபர்களை சிறைக்கு அனுப்புவதனை தவிருங்கள்

## சட்டமா அதிபர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

சிறப்புத் தேவைகளைத் தவிர்த்து சந்தேக நபர்களை சிறைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், பொலிஸ்மா அதிபர் சிடி விக்கிரமரத்னவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயைத் தொடர்ந்து சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைப்பதற்கான பரிந்துரைகளின் கீழ் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், சட்டமா அதிபரிடம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தற்போது சுமார் 21 ஆயிரம் கைதிகள் சிறைகளில் இருப்பதால் கோவிட்-19 பரவுவதைக் குறைக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் விடுத்த கோரிக்கையை சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்ததாக சிறைச்சாலை திணைக்களப் பேச்சாளர் கூறினார்.

அதன்படி, சிறைச்சாலைகளில் நெரிசல் மற்றும் கோவிட்-19 பரவுவதைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

### தென்மராட்சி பிரதேசத்தில்

## 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை 39 தொற்றாளர்கள் அன்டிஜென் பரிசோதனை மூலம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவந்த 16 பேரும்,கொடிகாமம்பொதுச்சந்தையில் 13பேரும், எழுதுமட்டுவாள் பகுதியில் 10 தொற்றாளர்களுமாக மொத்தமாக 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தென்மராட்சியில் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதியும் தொற்றாளர்களால் நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,30)

### யாழ். ஊர்காவற்றுறை

## சுகாதார வைத்திய அதிகாரிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வைத்திய அதிகாரிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தை அடுத்து. வைத்திய அதிகாரி கொரோனா சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தற்போதைய ஊர்காவற்றுறை வைத்திய சாலை பொறுப்பதிகாரி ஊர்காவற்றுறை பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரியாக கடமையேற்றிருப்பதாகவும் சுகாதாரத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.(ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், தரணிக்குளம், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், புதுக்குளம், ஆண்டிய புளியங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன் உறைந்த உணவு (இரல்பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலை மன்னார் வைத்தியசாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப் பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, இளைஞர் படைப்பயிற்சி மையம், பேசாலை- ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி, ஜோசப்வாஸ் நகர், கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், படப்பாடி நீர்வழங்கல், பருத்திப் பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## மன உறுதி வேண்டும்

❖ அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தே தீரும்.

❖ பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தும் பிள்ளைகள் கடவுளையும் மகிழ்ச்சி அடையச் செய்கின்றனர்.

❖ மனஒருமையுடன் பணியாற்றுங்கள். ஆர்வத்துடன் ஈடுபட்டால் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

❖ தவறை எண்ணி வருந்த வேண்டாம். நமக்கு வழிகாட்டும் தெய்வமாக இருப்பதால் தவறைப் பெரும்பேறாகக் கருதுங்கள்.

❖ அமைதி, மன்னிக்கும் பெருந்தன்மை, மனஉறுதி ஆகிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். வாழ்வில் வளரத் தொடங்குவீர்கள்.

❖ அடுத்தவர் கருத்தை கண்மூடித்தனமாக பின்பற்றாதீர்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள். அதே சமயத்தில் உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.

❖ விதையின் சக்தி தான் மரமாக வளர்கிறது. அதுபோல, ஒவ்வொருவரின் வாழ்வும் அவரவர் கொண்டிருக்கும் மன ஆற்றலைப் பொறுத்தே அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்திற்கு வீட்டை விட்டு வெளியேற வேண்டாம்

## நாட்டு மக்களுக்கு அவசர அறிவுறுத்தல்

(கொழும்பு)

**கொவிட் தொற்று பரவுவதை தடுக்க இன்று முதல் சுயமாக விதிக்கப்பட்ட முடக்கலுக்கு செல்லுமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இலங்கை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

அத்துடன், எமது ஆலோசனைகளையும் மருத்துவ நிபுணர்களின் கருத்தையும், அரசாங்கம் தொடர்ந்து புறக்கணிப்பதால் கட்டுப்பாடுகள் அல்லது முடக்கலை விதிக்க இனி அரசாங்கத்தை வலியுறுத்தப் போவதில்லை.



எனவே இன்று முதல் குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு வீட்டை விட்டு வெளியே வராமல் சுயமாக விதிக்கப்பட்ட முடக்கலுக்கு செல்லுமாறு மக்களை அறிவுறுத்துகிறோம் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# மோசமான காலம் வந்துவிட்டது எதற்கும் தயாராக இருங்கள்

## இராஜாங்க அமைச்சர் சன்ன

(கொழும்பு)

டெல்டா வைரஸின் புதிய திரிபுகள் உருவாகி வருகின்றன. இதனால் நீங்கள் எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை மோசமாக உள்ளது. இதில் மறைக்க ஒன்றுமில்லை.

அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் முக்கியமானவை. அதிக நோயாளிகள் அறிவிக்கப்படும் காலம் வருகிறது.

எனவே அத்தியாவசிய தேவைகளைத் தவிர வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம். அப்படி வெளியே வரும் போது வைரஸ் பரவும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும் வேகமாக பரவிவரும் டெல்டா வகை இப்போது நம் நாட்டிலும் வேகமாக பரவி வருகிறது.

தினமும் ஏராளமானோர் நோய்வாய்ப்படுவதுடன் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

இந்த வைரஸ் மிகவும் தீவிரமானது. இது உடலில்



ஒட்டிக்கொள்ளவும், நுரையீரலை சேதப்படுத்தவும், உடலை சேதப்படுத்தவும் அதிக வாய்ப்புள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# ஹிட்லரைப் போன்று முடிவெடுக்கும் ஜனாதிபதி

## அநுரகுமார சாடல்

(கொழும்பு)

சுகாதார தரப்பினர், உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைகளை புறக்கணித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹிட்லரைப் போன்று தன்னிச்சையாகவே முடிவுகளை எடுக்கின்றார்.

அவரது முடிவுகளுக்கு பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையின் பல அமைச்சர்களும் இணங்க வில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி. பி.) தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை மக்களின் உயிரை பாதுகாப்பதற்கு பதிலாக, அவர்களை மரணிக்கச் செய்யவே பயன்படுத்துகின்றார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது 9 நிமிடங்களுக்கு ஒரு மரணம் பதிவாகிக் கொண்டிருக்கிறது. அதேபோன்று 150 ஐ அண்மித்தளவில் மரணங்களும் பதிவாகிக் கொண்டிருக்கிறது. நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களில் 5 சதவீதமானோர் உயிரிழக்கின்றனர். பாரதூரமான கொவிட் தாக்கத்தை எதிர்கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை மிகவும் அபாய நிலைமையிலேயே உள்ளது.

செப்டெம்பர் மாதத்தின் இறுதியில் இலங்கையில் நாளாந்தம் 220 மரணங்கள் பதிவாகக் கூடும் என்றும், டிசெம்பர் மாத இறுதியில் குறைந்தது 15,000 மரணங்கள் பதிவாகும் என்றும் , கூடியது 30,000 மரணங்கள் பதிவாகும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் எதிர்வு கூறியுள்ளது. தற்போதுள்ள நிலைமை பாரதூரமானது என்பதைப் போல எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமையும் பாரதூரமானதாகவே காணப்படும் என்பதையே இந்த எதிர்வு கூறல் வெளிப்படுத்துகிறது.

இப்போதாவது ஊரடங்கினைப் பிறப்பித்தால் எதிர்வரும் 10 நாட்களுக்கு பதிவாகப் போகும் மரணங்கள் தடுக்க முடியாது என்ற போதிலும் , அதன் பின்னர் ஏற்படக் கூடிய மரணங்களையாவது தடுக்கலாம் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகளுக்கும் அப்பால் கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பல தரப்பினரும் வலியுறுத்துகின்ற போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவற்றை கவனத்தில் கொள்ளாமல் புலனாய்வு பிரிவினரின் தகவல்களுக்கு ஏற்ப மாத்திரமே தீர்மானங்களை எடுக்கிறார்.அதன் காரணமாகவே முடக்கம் அறிவிக்கப்படும் என்று சகலரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலும் கூட , ஜனாதிபதியால் பிரயோசனமற்ற தீர்வு அறிவிக்கப்பட்டது.

எனவே தான் தற்போது யாரும் அவரிடம் தரவுகளையும் தகவல்களையும் தெரிவிப்பதைக் கூட விரும்பவில்லை. ஜனாதிபதி கோட்டாபய தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை மக்களின் உயிரை பாதுகாப்பதற்கு பதிலாக , அவர்களை மரணிக்கச் செய்யவே பயன்படுத்துகின்றார் என அநுரகுமார தெரிவித்தார். (நி-5)

# கொரோனா சவாலை தோற்கடிக்க அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம்

## புதிய சுகாதார அமைச்சர் கெஹலிய டுவிட்

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று சவாலை தோற்கடிக்க நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் கூட்டு சமூகப் பொறுப்பு அவசியம் என புதிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் அவர் தனது டுவிட்டர் பதிவில், தற்போதுள்ள கொவிட் சூழ்நிலையை வெற்றி கொள்வது தொடர்பில் மக்களிடம் கோரிக்கையொன்றை முன் வைத்துள்ளார்.

அந்த பதிவில் மேலும், நான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் இலங்கையின் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டமை குறித்து பெருமை கொள்கிறேன்.

அதேவேளை இலங்கையில் கொவிட் - 19 தொற்று நிலைமையை வெற்றி கொள்வதற்காக இதுவரையில் சிறப்பாக செயற்பட்ட பவித்ரா வன்னியாராச்சிக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

எப்படியிருந்தாலும், இந்த சவாலை தோற்கடிக்க அனைத்து குடிமக்களினதும் கூட்டு சமூகப் பொறுப்பு அவசியம்.

இதை நனவாக்க இலங்கையில் உள்ள அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# கொவிட் பரவலை கட்டுப்படுத்தாவிட்டால் நாடு பேரழிவை சந்திக்கும்- ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

கொவிட் பரவல் தற்போது கட்டுப்படுத்தப்படாவிட்டால் நாடு பாரிய அழிவை எதிர்கொள்ளும். நாடு பாரிய அனர்த்தமொன்றுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் சகல கட்சி தலைவர்கள் , பிரதமர் , சபாநாயகர் மற்றும் சுகாதார அமைச்சர்களுக்கு அழைப்பு விடுத்து முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுமாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொவிட் தொற்று தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. தற்போது மரணங்களின் எண்ணிக்கை 5,000 ஐ விடவும் அதிகமாகும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலக சுயாதீன விசேட நிபுணர்களின் குழுவின் 5 ஆவது கூட்டத்தில் இந்த எண்ணிக்கை 30,000 வரை அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சுகாதார தரப்பினர் முழுமையாக கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகரித்தால் சுகாதார கட்டமைப்பும் சரிவடையும் இது தவிர எமது அரசாங்கம் உண்மையில் கடந்த மே மாதம் எடுத்த நடவடிக்கைகளை தற்போதும் எடுத்து கட்டுப்பாடுகளை விதிக்குமாயின் உயிரிழப்பவர்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட எண்ணிக்கையை 12,000 ஆக குறைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பரவல் தற்போது கட்டுப்படுத்தப்படாவிட்டால் நாடு பாரிய அழிவை எதிர்கொள்ளும். உண்மையில் இன்று பாரிய அனர்த்தமொன்றுக்கு முகங்கொடுத்துள்ளது.

மரணங்களை குறைப்பதற்கும் , கட்டுப்படுத்துவதற்கும் , சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

சகலரதும் நிலைப்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இதுவே முக்கியத்துவமுடையதாகும்.

எனவே தற்போது அரசியல் களத்திலுள்ள நாம் அனைவரும் இது தொடர்பில் செயற்பட வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிழப்பு...

வித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 263ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் ஒரே நாளில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோரின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

அத்துடன் நாட்டில் நேற்றும் 3 ஆயிரத்து 466 பேர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## உண்மையான...

யப்பட்ட அதேவேளை, 918 பேர் உயிரிழந்ததாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ தரவுகள் இவ்வாறு இருக்கும்போது, சமூகத்தில் உண்மையான தொற்று நோயாளர் தொகை இதனைவிட 3 மடங்கு அதிகமாக இருக்கலாம் என கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் பத்மா குணரத்ன கூறினார்.

இலங்கையில் டெல்டா உருத் திரிபு வைரஸ் மிக வேகமாகப் பரவி வருகிறது. முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் தொற்று நோயாளர் தொகையில் கடந்த வாரம் 34% அதிகரிப்பு ஏற்பட்டது.

அத்துடன், முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் கோவிட் மரணங்களும் கடந்த வாரத்தில் 60% அதிகரித்துள்ளன.

இந்த நிலைமையைப் பார்க்கும்போது அடுத்த வாரத்தில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

நாட்டில் கோவிட் - 19 தொற்று நோய் சமூகப் பரவல் நிலையில் உள்ளது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை எனவும் மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

மருத்துவமனைகள் ஏற்கெனவே அவற்றின் திறன் வரம்மை மீறியுள்ளன. இந் நிலையில் மக்கள் தொற்று நோயில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் எச்சரித்தார். (ம-3)

## கொடிகாமம்...

காமம் சந்தை தற்காலிகமாக மூடப்படுகின்றது.

கொடிகாமம் சந்தையில் வியாபாரிகளிற்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கடந்த சனிக்கிழமை 17 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

ஆனால் தொடர்ந்தும் சந்தை இயங்கி வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 13 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

ஆக மொத்தமாக 30 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து கொடிகாமம் சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ம-3,60)

## மறு அறிவித்தல்...

மறு அறிவித்தல் வரும் வரை இந்த நடைமுறை தொடரும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

ஊரடங்கு நடைமுறையில் உள்ள நேரத்தில் அத்தியாவசிய சேவைகள் மட்டுமே செயற்பட அனுமதிக்கப்படும் என்று இராணுவத் தளபதி கூறினார்.

மேலும் மறு அறிவித்தல் வரை அனைத்து பொதுக் கூட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டது.

இன்று முதல் மறு அறிவித்தல் வரை, வீடுகளில் அல்லது மண்டபங்களில் திருமண நிகழ்வுகள் நடத்தத் தடை செய்யப்பட்டுள்ளதோடு இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் பதிவுத் திருமணத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கில் ஆறு...

வயதுடைய ஆண் ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 39 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், பருத்தித்துறை இமையாணன் பகுதியில் மயங்கி வீழ்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த ஒலுமடுவைச் சேர்ந்த 87 வயதுடைய பெண் ஒருவரும் இராசேந்திரங்குளத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-3,33,60)

## 19 வயது...

இளம் யுவதியே அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## வவுனியாவில்...

தாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் 59 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250)

## வார இறுதி...

நாட்டில் டெல்டா வைரஸ் பரவல் காரணமாக நாளாந்தம் 150இற்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாகிவரும் பின்னணியில் இவ்வாறு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வார இறுதி நாட்களில் முழுநேர ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

எவ்வாறிருப்பினும், பொது இடங்களில் நடமாடுவதை இயன்றளவு தவிர்க்குமாறு அரசாங்கம் பொதுமக்களை கோருவதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழிலிருந்து...

3 பிள்ளைகளின் தந்தையான பழனிநாதன் பிரபாகரன் (வயது-40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 06 ஆம் திகதி முச்சக்கரவண்டி ஒன்றில் முல்லைத் தீவு பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றிற்கு நாதஸ்வரம் வாசிக்கச் சென்று கொண்டிருந்தபோது நட்டாங்கண்டல் பிரதான வீதியில் பின்னால் வந்த உழவு இயந்திரம் முச்சக்கரவண்டியின் வலது கரைப்பக்கம் மோதியுள்ளது.

இதனால் பின்னிருக்கையில் இருந்த குறித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## இஸ்லாமிய...

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளுக்கு பிறகு தலிபான்கள் மீண்டும் ஆட்சியை கைப்பற்றி உள்ளனர்.

நேற்று முன்தினம் தலைநகரம் காபூலை கைப்பற்றிய அவர்கள், அதிபர் மாளிகையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நாட்டின் முழு கட்டுப்பாடும் தலிபான்கள் கையில் வந்ததையடுத்து, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் வெளியேறி வருகின்றனர். தலிபான்கள் ஆட்சியில் என்ன நடக்குமோ? என்ற பீதியில் ஏராளமான ஆப்கான் மக்களும் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக காபூல் விமான நிலையத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர். இதனால் விமான நிலையத்தில் கூட்டம் அலைமோதுகிறது.

இதேபோல் அமெரிக்க விமானப்படை விமானத்தில் ஏற இடம் கிடைக்காததால் சிலர் தொங்கிக்கொண்டு பயணம் செய்துள்ளனர். இவ்வாறு பயணித்தவர்களில் 3 பேர் விமானத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்தனர்.

கூட்டத்தை கட்டுப்படுத்த அமெரிக்க வீரர்கள் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் மக்கள் சிதறி ஓடினர். இதற்கிடையே விமான நிலையத்தில் இருந்து ஐந்து பேரின் உடல்கள் அப்புறப்படுத்தப்பட்டதாக அங்கிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தனரா? அல்லது கூட்ட நெரிசலில் உயிரிழந்தனரா? என்பது குறித்த முழு தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (ம-3)

*(இது தொடர்பாக முன்னர் வந்த செய்தி உள்ளே)*

### தன நிதானய

திகதி - 2021.08.16
சீட்டிழுப்பு இலக்கம் - 568
W 01 40 58 72
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 16.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2833
ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கங்கள் 05 44 59 60
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2021/08/16
சீட்டிழுப்பு இலக்கம் 4538
ஆங்கில எழுத்து W | வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 1 0 3 5 1
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 16/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0886
வெற்றி எழுத்து R | சுப்பர் இலக்க 08 | வெற்றி இலக்கங்கள் 07 47 54 62

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 16/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1137
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 3 0 7 6 4 7
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1341
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 16.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,626,372
வெற்றி இலக்கங்கள் 30 37 57 72 | ஆங்கில எழுத்து U
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா (Shanida)

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3676
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 16.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,659,648.70
வெற்றி இலக்கங்கள் 16 24 54 60 | ஆங்கில எழுத்து T
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் 2,166,826/=
திகதி : 16.08.2021
வெற்றி வாரம் : 3227
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 07 26 44 62
மேஷம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,612,220/=

### SUPER BALL சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 1515
நிறம்
சீட்டிழுப்பு திகதி 16/08/2021
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் J 30 35 56 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,733,122.80/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1771
சீட்டிழுப்பு திகதி 16.08.2021
வெற்றி இலக்கங்கள் 18 19 21 44 | ஆங்கில எழுத்து Z
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 26,520,412
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா பரிசோதனை முடிவுகளின்படி யாழ்ப்பாணத்தில் 111 பேர் உட்பட வடக்கில் 138 பேருக்கு தொற்று

யாழ்.மாவட்டத்தில் 111 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 138 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 523 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் 111 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 11 பேர், வவுனியா மாவட்டத்தில் 08 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

# உதவியளிக்க முற்பட்டவரின் 6 பவுண் சங்கிலி அபகரிப்பு

## யாழ். கே.கே.எஸ் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளை மறித்து ஏற்றிச் செல்லுமாறு கோரியவருக்கு உதவியளிக்க முற்பட்டவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்றிரவு 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து சங்கிலியை அபகரித்துச் சென்றவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் சிக்கிக்கொண்டார். சந்தேக நபரிடமிருந்து சங்கிலியும் கைப்பற்றப்பட்டது.

வீதியில் மோட்டார் சைக்கிளிலில் சென்றவரை வழிமறித்த ஒருவர் தன்னை ஏற்றிச் செல்லுமாறு கேட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்றவர் விசாரித்துக் கொண்டிருக்கும்போதே அவர் அணிந்திருந்த 6 தங்கப்பவுண் தங்கச் சங்கிலியை அறுத்து தப்பித்து ஓடியுள்ளார்.

சங்கிலியைப் பறிகொடுத்தவர் துரத்திச் சென்றபோதும் பிடிக்க முடியவில்லை. சம்பவம் தொடர்பில் அறிந்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரை கைது செய்தனர். சந்தேக நபரிடமிருந்து தங்கச் சங்கிலி கைப்பற்றப்பட்டது.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டார். அவர் சிறையிலிருந்து அண்மையில்தான் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-03,33)




அகில இலங்கை ரீதியான
அதிதுரித மீட்டல் கருத்தரங்கு
Fees
1500 + 200
கையேடுகள் உங்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
Ka Subeesan
InOrganic
250 MCQ + PART II
August 20ற்கு முன்னர் கட்டணங்களைச் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
5 DAYS 20-30HRS
மாணவர் நிலை எதுவாயினும் ஒரே நாளில் மனநிலையில் மாற்றம் ஏற்படும் CHEMISTRY சுகம்.
(7659)
SCIENCE Ocean
தொடர்புகளுக்கு : 076 236 3470 / 077 430 7829
telegram_@Science Ocean


# மாற்றத்தை நினைத்து கூட பார்க்கவில்லை

## அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி

(கொழும்பு)

இவ்வாறானதொரு மாற்றம் ஏற்படும் என்று, தான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை எனத் தெரிவித்துள்ள போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, வாழ்க்கையில் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என மனதை தேற்றிக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

நேற்று அமைச்சரவை மாற்றத்தின் பின்னர், சுகாதார அமைச்சிலுள்ள அதிகாரிகளிடம் உரையாடியபோதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எதிர்பாராத தருணத்தில் தனக்கு இந்த அமைச்சு மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தான் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லும் வரை தனது அமைச்சுப் பதவியில் மாற்றம் வரும் என தான் அறிந்திருக்கவில்லை என்றார்.

எது எப்படியாயினும் வாழ்க்கையில் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (ம-03)


31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



பிறப்பு 08.01.1948
இறப்பு 18.07.2021

கடந்த 18.07.2021 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் சீனிவாசகம் செல்வரட்ணம்

அப்பா என்றழைத்த எங்கள் தெய்வம்
அறிவுதனை ஊட்டி, அன்புதனைக் காட்டி
அன்னையுமாய் தந்தையுமாய், அயராது எம் உயர்வுக்காய்
அரும்பாடுபட்டு, அல்லல்படும் வேளையிலும் ஆறுதலாயிருந்து
எம்மையெல்லாம் அரவணைத்து வந்தீரே - அப்பா!
இல்வாழ்வு சிறக்க வைத்து,
இன்று காலனவன் அழைத்தான் என்று எமக்கு
கதைபல சொல்லிவிட்டு எம்மைக் கலங்க வைத்துச் சென்றதேனோ
நாட்கள் தான் நகர்ந்தாலும் - அப்பா நாங்கள் உம்மை மறப்போமா!

" நினைவோரம் நீர் இருக்க நித்தம் உமைத் தேடுகின்றோம் "

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் முகநூலின் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

" கோணேச மஹால் "
வேம்போலை, இணுவில் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(7669)



காணி விற்பனைக்கு
பிரம்படி லேன் 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(வெட்டுக் கிணறு)
(7672)
076 702 3565



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2438)
0768226240 DHL



VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-2551)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



கண்ணீர் காணிக்கை



எமது சங்கத்தின் முன்னைநாள் தலைவரும்
லிங்கம் பேக்கரி உரிமையாளருமாகிய
திரு. சிவலிங்கம் சுந்தரலிங்கம்
அவர்களுக்கு
எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன்
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
[illegible] வீதி, திருநெல்வேலி.
நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.
(C-2550)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.